விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 119 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 03 செவ்வாய்க்கிழமை (16.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829








## புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பின் தமிழ்த் தலைமையை அடையாளம் காணவில்லை

### சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி



(மன்னார்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நிறுவுனரும், தலைவருமான வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பின்னர் ஒரு தமிழ் தலைமையை இன்னும் அடையாளம் காணவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழரசுக் கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது யாரை ஆதரிப்பது என்பது குறித்து கலந்தாலோசிக்கவில்லை. தமிழ் பொது வேட்பாளர் குறித்து ▶ 15

## யாழில் நீண்ட நாட்களுக்குப் பின்

# கொரோனாவால் பெண் மரணம்

- பிரான்ஸிலிருந்து ஆயுர்வேத சிகிச்சைக்காக யாழ்.வந்த பெண்ணே உயிரிழப்பு.
- சடலத்தை தகனம் செய்யுமாறு சுகாதார தரப்பால் அறிவிப்பு.
- கொரோனா தொற்றுத் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்குமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை.

(15ஆம் பக்கம் பார்க்க)



## அரங்கத்தை சிரிப்பில் ஆழ்த்திய ஜனாதிபதி



▶ 15

## 5 பில்லியன் கையிருப்பு

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்

(கொழும்பு)

மத்திய வங்கிக்குச் சொந்தமான வெளிநாட்டு கையிருப்பு 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் காணப்படுவதாக நிதி இரா ▶ 15

## மருமகனின் தாக்குதலில் மாமனார் உயிரிழப்பு

### முள்ளிவாய்க்காலில் சம்பவம்

(முல்லைத்தீவு)

மருமகனின் கொலை வெறித் தாக்குதலில் மாமனார் உயிரிழந்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் கடந்த 13ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பொன்னுச்சாமி செல்வரூபன் (வயது-62) என்பவரே உயிரிழந்தவராவார்.

மகளின் வீட்டிற்குச் சென்ற மாமனார் ▶ 15

## வங்குரோத்திலிருந்து மீள்வதா? இல்லையா? மக்களே தீர்மானிக்க வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

தற்போதுள்ள வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதா அல்லது தற்போதுள்ள வங்குரோத்து நிலையிலிருந்து மேலும் வங்குரோத்து ஆவதா என்பதை இம்முறையும் மக்களே தீர்மானிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாடசாலை நிகழ் ▶ 15

## கொத்து ரொட்டி ரூ.1900

### சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றும் உணவக உரிமையாளர்கள்

(கொழும்பு)

வீதியோர கடையொன்றில் ஒரு கொத்து ரொட்டி 1900 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டு சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றும் செயல் பலரிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைய நாட்களில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக, போக்குவரத்து மற்றும் உணவைப் பெற்றுக் கொள்ளுதல் போன்றவற்றில் பாரிய சிரமங் ▶ 15

## போதை வாங்குவதற்காக திருடிய இளைஞன் கைது

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் போதைவஸ்து வாங்குவதற்காக பொதுமக்களிடம் வழிப்பறியில் ஈடுபட்ட திருடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்த தலைமையில் இயங்கும் யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலில் இவர் ▶ 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொது வேட்பாளர் சாத்தியமில்லாத ஒன்று

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகள் மற்றும் அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள், புத்திஜீவிகள் என எல்லோரும் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியம் இல்லை என்ற முடிவினை எடுப்பார்கள் என எண்ணுகின்றேன் என கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.கே.மஸ்தான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தமிழர் தரப்பில் பொது வேட்பாளரினை நியமிப்பது தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றாலும் ஒக்டோபர் மாதம் முதலாம் இரண்டாம் கிழமைகளில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ் தரப்பிலான பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டு வெற்றி அடைவார் என்றால் பரவாயில்லை. ஆனால் ஜனாதிபதித் தேர்தலினை பொறுத்தவரை தேசியக் கட்சியைச் சார்ந்த ஒருவரே வெற்றி பெறுவார்.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் ஆதரிகின்ற வேட்பாளரினை வெற்றி அடைய வைப்பதற்கான முயற்சிகளை நாங்கள் எடுப்போம்.

மேலும் தமிழ் தரப்பில் பொது வேட்பாளர் என்ற விடயம் என்பது எந்த விதத்தில் சாத்தியம் அல்லது இதன் ஊடாக என்ன நன்மை கிடைக்கும் என்பது எமக்குத் தெரியவில்லை.

கடந்த காலங்களில் ஏதோ வொரு பிரதான வேட்பாளர்கள் ஒருவரையே ஆதரித்துள்ளனர். அதுவே சரியானதாக அமையும் என நான் எண்ணுகின்றேன்.

ஒருமித்த கருத்துடன் ஒரு ஜனாதிபதி வேட்பாளரை தெரிவதன் மூலம் வெற்றியை நோக்கி செல்வதாக இருந்தால் பரவாயில்லை ஆனால் அது சாத்தியமில்லை.

தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற முயற்சிஏன் ஏற்பட்டுள்ளது என்பது புரியவில்லை.

மேலும் தமிழ்க் கட்சிகள் மற்றும் அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள் புத்திஜீவிகள் என எல்லோரும் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியம் இல்லை என்ற முடிவினை எடுப்பார்கள் என எண்ணுகின்றேன் என்றார். (ம-7.10)

# துப்பாக்கிச் சூட்டில் யுவதி உயிரிழப்பு

பொலன்னறுவை, கிரித்தல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், 17 வயதுடைய யுவதியொருவர் உயிரிழந்துள்ளார்.

40 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரினாலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த யுவதி, துப்பாக்கிச் சூடு நடத்திய குறித்த நபருடன் சில வருடங்களுக்கு முன்னர் காதல் தொடர்பில் இருந்தார் என்றும், இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவர்கள் தனியாக வசித்து வந்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

எனினும், இவர்களிடையிலான கருத்து முரண்பாடு காரணமாக சில நாட்களுக்கு முன்னர், குறித்த யுவதி அவரது பெற்றோரின் வீட்டுக்கு வந்த நிலையிலேயே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த நபர், உயிரிழந்த குறித்த யுவதியை தனது வீட்டுக்கு வந்து வசிக்குமாறு பல தடவைகள் கேட்டுக் கொண்ட போதிலும், அதற்கு யுவதி இணங்காமல் இருந்துள்ளார்.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக குறித்த யுவதி அவரது தாயாருடன் அயல் வீட்டுக்கு சென்றிருந்தபோது, அங்கு வந்த குறித்த நபர், யுவதி மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

மின்னேரியாப் பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7.10)

# சந்தேகநபர்களை கைது செய்கையில் அவர்களது உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள்

## பொலிஸாரிடம் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

(மதவாச்சி)

மதவாச்சி போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களினால் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் கடந்த 7ஆம் திகதி மதவாச்சி - மன்னார் வீதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இளைஞன் ஒருவரும் அவரது நண்பரும் சிறிய ரக லொறியில் பயணித்த போதே இந்த சம்பவம் நேர்ந்துள்ளது.

இதன்படி, போக்குவரத்து பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளான இளைஞன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவரது ஒரு விதைப் பையை சத்திரசிகிச்சை மூலம் அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்த நிலையில், பொலிஸ் அதிகாரிகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றும் போது காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்வதனை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

அத்துடன், இத்தகைய கண்டிக்கத்தக்க செயல்கள் நீதி மற்றும் மனித உரிமைகளின் அடிப்படைக் கொள்கைகளை மீறுவது மட்டுமல்லாது, சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான செயற்பாடுகள் அல்லது தண்டனைகளுக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கைகளை மீறுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும், இத்தகைய நடவடிக்கைகள் அரசியலமைப்பின் 11 ஆவது பிரிவை முற்றிலும் மீறுவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வழக்கை கூர்ந்து கண்காணிப்பதுடன், இதுபோன்ற கொடூரமான செயல்கள் மீண்டும் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்ய தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுக்குமாறு சட்டத்தரணிகள் சங்கம் அதிகாரிகளை வலியுறுத்தியது. (ம-7.10)

# இஸ்ரேல் - இலங்கை விமான சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் போர்ச் சூழ்நிலை காரணமாக இஸ்ரேல் விமான நிறுவனங்கள் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே எதிர்வரும் நாட்களில் இலங்கையர்கள் இஸ்ரேல் வருவதற்கு காத்திருந்தால், உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து திகதியை திருத்தியமைக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7.10)

### புத்தாண்டு கால கட்டத்தில்

# அதிவேக நெடுஞ்சாலைகளூடாக 40 மில்லியன் ரூபாய் வருமானம்

புத்தாண்டு காலப் பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகள் ஊடாக வருமானமாக 40 மில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் ஆர்.ஏ.டி கஹடபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதன்படி, கடந்த 10 ஆம் திகதி முதல் இதுவரையில் அதிவேக நெடுஞ்சாலைகளின் ஊடாக சுமார் ஐந்து இலட்சத்து 50 ஆயிரம் வாகனங்கள் பயணித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் ஆர்.ஏ.டி கஹடபிட்டிய தெரிவித்துள்ளார். (ம-7.10)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின் பழைய மாணவனும் விளையாட்டு வீரருமான

அமரர் சொக்கலிங்கம் சண்முகலிங்கம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

(Starter Shanmugalingam)



அவர்கள் எமது பாடசாலையின் ஒவ்வொரு வருட விளையாட்டுப் போட்டியிலும் ஓட்ட நிகழ்வுகளை ஆரம்பிப்பவராக (Starter) கடமையாற்றிய காலங்களை என்றும் மறக்க முடியாது. அவரது கம்பீரம், அவரது குரல் என்றும் பசுமரத்து ஆணிபோல் அழியாது. அவரது 31 ஆம் நாள் நினைவுகளில் நாமும் பங்கெடுத்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 1950.03.29 — மறைவு 2024.03.17

(C-0145)

பழைய மாணவர் சங்கம்

யா/கனகரத்தினம் ம.ம.வி (ஸ்ரான்லிக் கல்லூரி)



## பதவி வெற்றிடம்

### பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்

தகைமை

- க.பொ.த உயர்தரம்
- சிங்களத்தில் சரளமாகப் பேசும் திறன்
- வயது 25 - 65
- தகைமையுடைய இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பு :

யாழ்ப்பாணத்தில் இருந்து 7Km தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 076 097 3121

பொது முகாமையாளர்
வலம்புரி நாளிதழ்,
இல.191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்தியகிழக்கில் தொடரும் பதற்றம்!

## எரிபொருள் விலை அதிகரிக்க வாய்ப்பு

### சர்வதேச ஊடகங்கள் தகவல்

(வோஷிங்டன்)

**மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை காரணமாக இலங்கையில் எரிபொருள் மற்றும் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இஸ்ரேல் மீது ஈரான் மேற்கொண்ட தாக்குதல்கள் இந்த நிலைக்கு வழிவகுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் மீது ஈரான் கடந்த சனிக்கிழமை தாக்குதலை மேற்கொண்ட நிலையில், எதிர்வரும் நாட்களில் இவ்வாறான மேலும் பல தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த போர் நிலை காரணமாக மத்திய கிழக்கு நாடுகளின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கைக்கு எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகிக்கப்படுவதில் தாமதங்கள் ஏற்படலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இலங்கையில் எரிபொருள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட மேலும் சில இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை அதிகரிக்கக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## 24 மணி நேரத்தில் 244 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்தில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' நடவடிக்கைகளின் போது 244 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த சந்தேக நபர்களில் 240 பேர் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து ஹெரோயின் 104 கிராம் 705 மில்லிகிராம், ஐஸ் 58 கிராம் 324 மில்லிகிராம், கஞ்சா 191 கிராம் 165 மில்லிகிராம், மாவா 86 கிராம் 65 மில்லிகிராம், போதை மருந்துகள் 35 கிராம் 86 மில்லிகிராம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (நி-6)

## மீண்டும் வேகமெடுக்கும் டெங்கு நோய்த்தாக்கம்

(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதாகவும் இந்த ஆண்டில் இது வரையான காலப்பகுதிக்குள் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருப்பதாகவும் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 21,000 ஐ தாண்டியுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

ஏப்ரல் 13 ஆம் திகதி வரை இலங்கையில், மொத்தம் 21,028 வழக்குகள் பதிவாகியுள்ள அதே சமயம், இலங்கையின் பல பகுதிகளில் கடந்த சில நாட்களாக கணிசமான மழை பெய்து வருவதால், டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில், சுற்றுப் புறங்களை சுத்தமாக வைத்திருக்கவும், நுளம்புகள் பெருகும் இடங்களை அழிக்கவும் சுகாதார அதிகாரிகள் மக்களை கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## மகிந்தவின் இல்லத்திலும் களைகட்டிய புத்தாண்டு





(கொழும்பு)

தமிழ் சிங்கள புத்தாண்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நாட்டின் பல பாகங்களிலும் வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்திலும் சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ளன. (நி-6)

## இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளனர்

### இலங்கை தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஈரான் ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ள நிலையில் இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் தொடர்பில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் டுபாயிலிருந்து இலங்கையர்கள் குழுவுடன் டெல் அவிவ் நோக்கி பயணித்த விமானம் தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

குறித்த விமானத்தை மீண்டும் டுபாய் நோக்கி திரும்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த விமானத்தில் இஸ்ரேல் நோக்கி பயணித்த இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை திரட்டி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

## முட்டையின் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த சில நாட்களாக குறைவடைந்திருந்த முட்டையின் விலை தற்போது மீண்டும் அதிகரித்துள்ளதாக சந்தைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

பண்டிகைக் காலத்தினை முன்னிட்டு முட்டையின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் 38 ரூபாவாக காணப்பட்ட முட்டையின் விலை தற்போது 55 ரூபாவாக காணப்படுகின்றது.

அத்துடன் உள்நாட்டில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு நிலவும் பட்சத்தில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில், கேக் உள்ளிட்ட உணவு பொருட்களின் உற்பத்திக்காக அதிகளவில் முட்டைகள் பயன்படுத்தப்பட்டமை யினாலேயே முட்டையின் விலை அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நுகர்வோர் சட்டத்தை மீறிய சுமார் 700 இற்கு மேற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பண்டிகைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் நுகர்வோர் சட்டத்தை மீறிய 726 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பொருட்களில் விலைப்பட்டியல் இன்றி விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் இவ்வாறு வழக்கு தொடரவுள்ளதாக அதிகார சபையின் விசேட விசாரணை பணிப்பாளர் சஞ்சய இரசிங்க தெரிவித்துள்ளார்.


மேலும் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 7,627 வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# டிராவிஸ் ஹெட் 'மின்னல் சதம்'

## ஹைதராபாத்திடம் போராடி வீழ்ந்தது பெங்களூரு



ஐ.பி.எல்., லீக் போட்டியில் பெங்களூரு அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹைதராபாத்திடம் வீழ்ந்தது. மின்னல் வேக துடுப்பாட்டத்தை வெளிப் படுத்திய டிராவிஸ் ஹெட், 41 பந்துகளில் 102 ஓட்டங்களை விளாசினார்.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 7ஆவது சீசன் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் மோதுகின்றன.

நேற்று நடந்த 30ஆவது லீக் போட்டியில் பெங்களூரு அணி, ஹைதராபாத்தை எதிர்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற பெங் களூரு அணியின் தலைவர் டுபிளசி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**39 பந்துகளில் சதம்**

ஐ.பி.எல்., அரங்கில் அதிவேக சதம் அடித்த வீரர்களில் நான்காவது இடம் பெற்றார் டிராவிஸ் ஹெட். நேற்று இவர் 39 பந்தில் சதம் கடந்தார். முதல் மூன்று இடத்தில் கெய்ல் (30 பந்து, 2013), யூசுப் பதான் (37, 2010), மில்லர் (38, 2013) உள்ளனர்.

**நல்ல ஆரம்பம்**

ஹைதராபாத் அணிக்கு டிராவிஸ் ஹெட் - அபிஷேக் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. டாப்லே வீசிய இரண்டாவது ஓவரில் ஹெட், ஒரு பவுண்டரி, சிக்சர் அடிக்க, கடைசி பந்தை அபிஷேக் சிக்சருக்கு அனுப்ப, 20 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. அடுத்து வந்த யாஷ் தயாள் ஓவரில் 2 சிக்சர், 1 பவுண்டரி விளாசிய ஹெட், 20ஆவது பந்தில் 50 ஓட்டங்களை கடந்தார்.

ஏழாவது ஓவரை வீசினார் வில் ஜாக்ஸ். இதில் மீண்டும் மிரட்டிய ஹெட், 2 சிக்சர், 1 பவுண்டரி என தொடர்ந்து அசத்தினார்.

ஹைதராபாத் அணி 7.1 ஓவர்களில் 103 ஓட்டங்கள் எடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 108 ஓட்டங்கள் (48 பந்துகள்) சேர்த்தபோது அபிஷேக் (34) ஆட்டமிழந்தார்.

**மின்னல் சதம்**

வைஷாக் வீசிய போட்டியின் 12ஆவது ஓவரில் மூன்று பவுண்டரி அடித்த ஹெட், 39ஆவது பந்தில் சதம் எட்டினார். ஐ.பி.எல்., அரங்கில் இவர் அடித்த முதல் சதம் இது. ஹெட் 41 பந்தில் 102 ஓட்டங்கள் எடுத்த போது, பெர்குசன் பந்தில் டுபிளசியிடம் "பிடி" கொடுத்து ஆட்டமிழந்தார். இதன் பின் வந்த கிளாசன், 23 வது பந்தில் அரைச்சதம் எட்டினார்.

ஹைதராபாத் அணி 15 ஓவர்களில் 205/2 ஓட்டங்கள் எடுத்தது. பெர்குசன் வீசிய பந்தை (16.2 ஓவர்), கிளாசன் 106 மீ., தூரத்துக்கு அனுப்ப, மைதானத்தின் மேற்கூரையில் சென்று விழுந்தது. இவர் 67 ஓட்டங்கள் எடுத்த போது (31 பந்து), பெர்குசன் "வேகத்தில்" வீழ்ந்தார்.

கடைசி நேரத்தில் களமிறங்கிய அப்துல் சமத், தன் பங்கிற்கு ஓட்ட மழை பொழிந்தார். டாப்லே வீசிய 19 வது ஓவரில் 3 பவுண்டரி, 2 சிக்சர் என விளாச, 25 ஓட்டங்கள் எடுக்கப பட்டன.



கடைசி ஓவரில் மார்க்ரம், தலா ஒரு பவுண்டரி, சிக்சர் அடிக்க, சமது ஒரு சிக்சர் அடித்து மிரட்டினார். ஹைதராபாத் அணி 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 287 ஓட்டங்கள் குவித்தது. சமது (37 ஓட்., 10 பந்து), மார்க்ரம் (32 ஓட்., 17 பந்து) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**கார்த்திக் ஆறுதல்**

பின் களமிறங்கிய பெங்களூரு அணிக்கு டுபிளசி, ஹோலி ஜோடி வேகமாக ஓட்டங்கள் சேர்த்தது. முதல் விக்கெட்டுக்காக 6.1 ஓவர்களில் 80 ஓட்டங்கள் சேர்த்த போது ஹோலி (42) ஆட்டமிழந்தார். இதன் பின் வந்த வில் ஜாக்ஸ் (7), படிதர் (9) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, டுபிளசி 62 ஓட்டங்க்ள எடுத்து திரும்பினார். அடுத்து வந்த தினேஷ் கார்த்திக். 23ஆவது பந்தில் அரைச்சதம் கடந்தார்.

இவர் 83 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

20 ஓவர்களில் பெங்களூரு அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது.

போட்டியின் நாயகனாக ஹைதராபாத்தின் ஹெட் தெரிவானார். (ம-7,10)

# 6 பந்துகள் ; 6 சிக்ஸர்கள்

## நேபாள வீரர் திபெந்திரா சாதனை



சர்வதேச "ரி20" போட்டியில் 6 பந்துகளில் 6 சிக்ஸர்கள் விளாசினார் நேபாள அணியின் திபேந்திரா சிங்.

ஆசிய கிரிக்கெட் கவுன்சில் சார்பில் பிரிமியர் கிண்ண "ரி20" கிரிக்கெட் தொடர் ஓமனில் நடக்கிறது.

அல் அமெராத்தில் நேற்று நடந்த "ஏ" பிரிவு லீக் போட்டியில் நேபாளம் - கட்டார் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாள அணிக்கு ஆசிப் ஷேக் (52), குஷால் மல்லா (35) கைகொடுத்தனர். கட்டார் வீரர் கம்ரான் கான் கடைசி ஓவரை வீசினார். பந்தை எதிர்கொண்ட திபேந்திர சிங் அய்ரீ, முதல் மூன்று பந்தையும் சிக்சருக்கு அனுப் பினார். அடுத்த பந்தில் சிக்சர் அடித்த இவர், அரைச்சதம் கடந்தார். தொடர்ந்து அசத்திய இவர் கடைசி இரு பந்தையும் சிக்ஸருக்கு விரட்டினார்.

20 ஓவர்களில் நேபாள அணி 210/7 ஓட்டங்கள் குவிததது.

திபேந்திரா (64 ஓட்., 21 பந்து) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**மூன்றாவது வீரர்**

இதையடுத்து தொடர்ந்து ஒரே ஓவரில் 6 பந்துகளிலும் 6 சிக்ஸரகள் அடித்த முதல் நேபாள வீரரானார்.

சர்வதேச "ரி20"இல் இந்தியாவின் யுவராஜ் சிங் (2007, இங்கிலாந்து), மே. தீவுகளின் பொலார்ட்க்கு (2021, இலங்கை) அடுத்து மூன்றாவது வீரர் ஆனார்.

அடுத்து களமிறங்கிய கட்டார் அணிக்கு அணித் தலைவர் முகமது தன்வீர் (63) மட்டும் அரைச்சதம் அடித்து உதவினார். மற்றையவர்கள் ஏமாற்ற 20 ஓவர்களில் கட்டார் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களை மட்டும் எடுத்து, 32 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஒவ்வொரு மாதமும் 30 இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்

(கொழும்பு)


இலங்கையில் ஒவ்வொரு மாதமும் 25 முதல் 30 இணையத்தளங்கள் சைபர் தாக்குதலுக்கு உள்ளாவதாக இலங்கை கணனி அவசர பதிலளிப்பு மன்றம் தெரிவித்துள்ளது.

இதன் பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சைபர் தாக்குதல் காரணமாக செயலிழந்த கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மீளமைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# இறக்குமதிக் கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்படும்

## நிதி இராஜாங்க அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் வெளிநாட்டு ஒதுக்கம் அதிகரித்துள்ள நிலையில், இறக்குமதி கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்காலத்தில் தேவைகளுக்கு ஏற்ப வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிகளும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது 5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான வெளிநாட்டு ஒதுக்கம் பேணப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி-6)

# பயன்தரும் மரங்களை சேதப்படுத்திய யானைகள்

## கொழுத்துபுலவு மக்கள் கவலை



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொழுத்துபுலவு மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நேற்று முன்தினம் இரவு உள்நுழைந்த 6 காட்டு யானைகள் 120 இற்கும் மேற்பட்ட வாழைகள், 50 இற்கும் மேற்பட்ட தென்னைகள் என்பவற்றை துவம்சம் செய்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் தொடர்ச்சியாக உள்நுழையும் காட்டு யானைகளினால் அப்பகுதி மக்களின் ஜீவனோபாயமாக முன்னெடுக்கப்பட்டு வரும் விவசாய செய்கையில் தென்னை, வாழை, பூசணி போன்ற பயிர்களை துவம்சம் செய்து வருவதாக தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த பகுதிக்கு நேரில் விஜயம் செய்து யானை வேலி ஒன்றினை அமைத்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-316)


### ஊர்க் கோழிக்குஞ்சு விற்பனை

2 மாத ஊர்க்கோழிக் குஞ்சுகளும் விறாத்துக் கோழிக்குஞ்சுகளும் '6 உயரம் 3' அகல முதிரைக் கதவும் முதிரை மேசையும் விற்பனைக்கு உண்டு. (458)

077 873 0129



### இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
### SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | |
|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 |
| சலவைத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 |
| ஹான்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| வோஷிங் பவுடர் | 3Kg | ~~1185~~ | 900 |

விசேட விலைக் கழிவு

(447)

No.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola.
Reg No. PV00240433

288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494


### ஜீலான் மத்திய கல்லூரியில் குர்ஆன்-தப்ஸீர் பாடநெறி



பாணந்துறை ஜீலான் மத்திய நவோதய கல்லூரியில் (தேசிய பாடசாலை) பழைய மாணவிகள் சங்கத்தினால் (OGA) ரமழான் மாதத்தில் நடாத்தப்பட்ட குர்ஆன் -தப்ஸீர் பாடநெறி வகுப்பில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளுக்கு கல்லூரி அதிபர் ஏ.எம்.ஹலீம் மஜீத் அவர்கள் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் அஸ்ஸெய்க் எம்.ஆர். எம்.றிழ்வான் (இஸ்லாஹி). பழைய மாணவிகள் சங்க செயலாளர் யாழ் பஸ்னா இக்பால் ஆகியோரையும் படத்தில் காணலாம். (C-0144)


### யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்

## பொதுக்கூட்டம்

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பழைய மாணவர் சங்கத்தின் உறுப்புரிமை கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(C-0143)

Secretary
Old Students Association
J/Kodikamam Thirunavukkarasu c.c


# இராசிபலன்

16.04.2024
சித்திரை 03, செவ்வாய்க்கிழமை
அட்டமி பிற்பகல் 5.43 மணிவரை

புநர்பூசம் முற்பகல் 7.09 மணிவரை
சுபநேரம்- 10.34-12.04 மணிவரை
இராகுகாலம்-3.04- 4.34 மணிவரை

சந்திராஷ்டமம்
அனுசம்

வளவன்

**மேஷம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், பெற்றோர் ஆதரவால் பெருமைகள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**கடகம்:** பயணங்களால் பலனுண்டு, கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** குடும்பத்தினர் ஒத்துழைப்பில் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமானசிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**மகரம்:** நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்:** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்:** தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**கும்பம்:** சுவாரஷ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையனை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்:** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும், வழிபாடு காரிய வெற்றி தரும்.


**கன்னி:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம்.

**தனுசு:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

உன்னை அறிவதால் மட்டுமே உனக்கு மகிழ்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. அடியவர்கள் அங்கபிரதட்டை, கற்பூரச்சட்டி எடுத்து நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (படம்: சிவசாந்தன்)

# கச்சாய் பகுதியில் மோ.சைக்கிள்கள் விபத்து

## இரு சிறுவர்கள் உட்பட 3 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

புதுவருட தினத்தன்று நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இரு சிறுவர்கள் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் வீதி மகிழங்கேணிச் சந்திப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ் விபத்துச் சம்பவித்துள்ளது.

சாவகச்சேரிப் பகுதியில் இருந்து தனது இரண்டு பேரக் குழந்தைகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்த பேரன் மகிழங்கேணிப் பகுதியில் மோட்டார் சைக்கிளை கிளை வீதிக்கு திருப்ப முற்பட்ட வேளையில் பின்பக்கமாக வேகமாக மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு குழந்தைகள் மற்றும் வேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அதில் ஒரு சிறுமி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்து இடம் பெற்ற இடத்தில் மதுப் போத்தல்கள் வீழ்ந்து கிடந்த நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(நி-6-30-33)

# அபகரிக்கப்படும் வளங்கள் அணிதிரண்டு தடுப்போம்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சி

(யாழ்ப்பாணம்)

வயலும் கடலும் இணைந்து எமது விவசாயிகளுக்கும் மீனவ மக்களுக்கும் வாழ் வளித்து வரும் பிரதேசம் பூநகரியின் பொன்னாவெளியாகும். வளம் மிக்க அப்பிரதேசத்தை அந்நிய பல்தேசியக் கம்பனியான டோக்கியோ சீமெந்து கம்பனிக்கு சுண்ணக்கல் அகழ்வுக்காகத் தாரைவார்க்கப்படுவதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சி கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய பொருளாதாரத்தை சிதைத்து நாட்டின் அனைத்து மக்களையும் அடிமைகளாக்கி வருவதையே கடந்த 45 வருடகால அரசியலமைப்பும் அதன் கீழான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையும் கச்சிதமாக முன்னெடுத்து வந்துள்ளன.

அதன் தொடர்ச்சியினைத் தமது எஞ்சியுள்ள ஆட்சிக் காலத்தினுள் ரணில்-ராஜபக்ஷ ஆட்சியினர் செய்து முடிக்க முன் நிற்கின்றனர். அதில் ஒன்றே பூநகரியின் வளமான பொன்னாவெளி வயல் பிரதேச நிலங்களை டோக்கியோ சீமெந்து ஆலைக்குத் தாரை வார்ப்பதாகும்.

பொன்னா வெளியைச் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக அப்பிரதேச மக்கள் கடந்த நூற்றி நாற்பது நாட்களுக்கு மேலாக எதிர்ப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றனர். எமது வளமான பிரதேசங்கள் அந்நிய சக்திகளினால் அபகரிக்கப்படுவதற்கு எதிராக அனைத்து மக்களும் அணி திரள்வது இன்று அவசியமாகி உள்ளது. என அவ்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# முன்னாள் தவிசாளர் நடனேந்திரன் காலமானார்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் உடல் நலக் குறைபாட்டால் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

உடல்நலக் குறைப்பாட்டால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த இரண்டு உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்டு , வலி. மேற்கு பிரதேச சபையில் இரண்டு தடவைகள் தவிசாளராக பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6-33)



புதுவருடத்தினை முன்னிட்டு நாகர் கோவில் வெண்மதி சிறுவர் கழகம் நடத்திய விளையாட்டு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, வெளிநாடு<br>எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14464 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 51 1/2<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: A/L, தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா/சுவிஸ்)<br>தொ.இ: G/14500 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>கி.பா: 50<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, நகைக்கடை<br>எதிர்பார்ப்பு: வேலை உள்ள நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14468 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: Bsc, பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டில் பட்டதாரி<br>தொ.இ: G/14279 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்: B/A, Teacher<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ளபெண், உத்தியோகம்<br>தொ.இ: B/14469 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 23 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA, MA<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம். வெளிநாடு (பிரான்ஸ். சுவிஸ். ஜேர்மன்)<br>தொ.இ: G/14289 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 42<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Diploma in quantity Servering, Building Contractor<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14470 | பிறப்பு: 1977 RC<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA, Teacher விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: கத்தோலிக்கம் முன்னுரிமை இந்துக்களும் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/14291 |

கல்யாணமாலை
இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்




### ஜாதகர்

இந்த புது வருடத்தில், மேஷ ராசியின் அதிபர் செவ்வாய்,லாப ஸ்தானத்தில் அமர்ந்துள்ளார். எனவே இந்த வருடம், மேஷ இராசியினர் நினைத்த அனைத்தும் அழகாக நிறைவேறி விடும். எண்ணியவை எல்லாம் எண்ணியவாறே ஈடேறும் என்று ஆசீர்வதிப் பார்களே அதுபோல் அனைத்தும் கைகூடி வரும். இதில் ஒன்றை சொல்லியே ஆக வேண்டும்.நினைப்பதை நல்ல செயலாக நினையுங்கள்.

செல்வம்,செல்வாக்கு பெருக, நல்ல நட்பு கிடைக்க, முயற்சிகளில் முன்னேற்றம், வாழ்வின அபிவிருத்தி என இவை சார்ந்து சிந்தனை செய்யுங்கள். இந்த வருடம் அத்தனையும் நடக்கும் நல்லன எல்லாம் கூடிவரும்.

### தனம்

இந்த புது வருடம் மேஷ ராசியினருக்கு மிக மேன்மையான பண வரவு தரும். உங்களில் அனேகம் பேர் வெளிநாட்டு பணப்புழக்கம் பெறுவீர்கள்.சிலருக்கு வீடு, மனை விற்ற பணம் கிடைக்கும்.

சிலருக்கு வழக்கில் வெற்றி பெற்று, அவை சார்ந்த தொகை கிடைக்கும். இதில் கவனிக்கத் தக்க ஒன்றுண்டு. பண வரவு அதிகமாக இருந்தாலும், செலவும் மிக அதிகமாகவே வரும். எனவே, வரும் தொகையை கையில் வைத்திருக்கா மல், உடனே முதலீடு செய்து விடுங்கள்.

**வாக்கு:** உங்கள் சொற்கள் இனிமையும், கண்டிப்பும், சற்று குதர்க்கமும் கலந்திருக்கும். எனவே வார்த்தைகளில் கட்டுப்பாடு தேவை.

**குடும்பம்:** உங்கள் குடும்பம் வெளியூர், வெளிநாட்டுக்கு இடம் பெயரும் வாய்ப்பு தென் படுகிறது. நிறைய நிரந்தர வைப்புத் தொகை முதலீடு உண்டு. பிறரிடம் பேசும்போது சண்டையிடும் தொனியில் பேசுவதைத் தவிருங்கள்.

**சகோதரம் :** உங்கள் சகோதரனால், நிறைய வேண்டாத செலவுகள் உண்டு. யாரிடமாவது சண்டையிட்டு, வீண் தண்டம் அழ வேண்டியிருக்கும்.

உங்கள் பணியாளர்கள், அவ்வப்போது வேலையை விட்டு ஓடிவிடுவர்.

### வீடு, மனை

உங்களில் சிலர், புது வீட்டுக்கு பணம் கட்டுவீர்கள். சிலர் பழைய வீட்டை விற்று, அடுக்குமாடி குடியிருப்புக்கு செல்வீர்கள். சிலரின் வீடு, மனை மேல் இருந்த வழக்கு முடிவுக்கு வந்து, நன்மை தரும் உங்களில் சிலர் புதுவிதமாக, மொடலாக வீடு. கட்டுகிறோம் என்று, கிறுக்குத்தனமாக எதையாவது செய்து கொண்டிருப்பீர்கள். வாகன யோகம், மனை, வயல் யோகம் உண்டு. உங்கள் தாயார் வெளி நாடு செல்லும் வாய்ப்பு வரும். ஆரம்பக் கல்வி மாணவர்கள், பள்ளி மாறக்கூடும். மீனவர்கள் வெளிநாடு சென்று மீன் பிடிப்பர். விவசாயிகள் வெளிநாட்டு பழங்கள். பூக்களை தங்கள் வயலில் முயன்று பார்ப்பர்.

### சந்ததி

இந்த வருடம், வாரிசு இல்லாதோர், காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, இந்த புது வருடம் வாரிசு யோகம் தரும். மேலும் ஆண் குழந்தை வேண்டும் என விரும்புவர்களுக்கு, ஆண் வாரிசு கிடைக்கும். உங்களின் சிலரின் வாரிசுகள், மேற் கல்வி சம்பந்தமாக வெளிநாடு செல்வர். சிலர் வேலை விடய மாக வெளியூர், வெளிநாடு செல்வர்.

**காதல்:** சிலருக்கு துளிர்க்கும் காதல், வந்த வேகத்தில் காணாமல் போய் விடும். அதற்கு அந்த நபர் ஏற்கெனவே திருமணம் ஆனவராக இருப்பது தெரிய வருவதால் இவ்விதம் அமையும்.

**பங்குகள்:** பங்குவர்த்தகம் மிக மேன்மை தரும். அதில் வரும் அதிக பணத்தை. மீண்டும் அதிலேயே முதலீடு செய்வீர்கள். கலைஞர்கள் மிக மேன்மையும், புகழும் பெறுவர். வெளிநாட்டிலும் இவர்கள் புகழ் பெறுவர். இவர்களில் சிலர் ஆன்மிக மேன்மைக்கும், அரசு வளர்ச்சிக்கும் நன்கு செலவளிப்பர். அல்லது ஒரு ரூபாய் கொடுத்து விட்டு, ஒன்பது ரூபாய் கொடுத்ததாக விளம்பரம் செய்து கொள்வர். ஆரோக்கிய மேம்பாட்டுக்காக நடக்க ஆரம்பித்து விடுவீர்கள்.

### நோய்

இந்த வருடம், அடிக்கடி அனைத்தையும் மறந்து விடு வீர்கள். அல்லது ரொம்ப சந்தேகப்படுவீர்கள். சிலருக்கு பாதத்தில் நரம்பு சுருட்டிக்கொள்ளும். சிலர் நடப்பதற்கு சற்று சிரமம் இருப்பதாக உணர்வீர்கள். கழுத்தில் நீர் கோர்த்து வீங்கியதுபோல் இருக்கும். அடிக்கடி வாயு பிரியும் அவஸ்தை ஏற்படும்.

இந்த வருடம் வேலை தேடு வோர், ஒருசிலருக்கு அரசுப்பணி கிடைக்கும். அதிலும் ஆசிரியப் பணியில் அரசு பணி வாய்ப்பு உண்டு. வேறு சிலருக்கு ஒரு தடை தாமதத்துக்குப் பிறகு வெளியூர், வெளிநாட்டு பணி கிடைக்கும். வேலை கிடைக்க, பண செலவு இருக்கும். இப்போது உங்கள் மீதுள்ள வழக்குகளில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். வெற்றியின் பயன் சற்று ஊசலாட்டத்திற்கு பின் கைக்கு கிடைக்கும்.

### திருமணம்

இந்த புது வருடத்தில், திருமணம் ஆகாதவர்களுக்கு, கண்டிப்பாக திருமணம் நடந்து விடும். திருமணத்தில் கட்டுக்கடங்காத செலவுகள் உண்டு. சிலருக்கு வெளியூர், வெளிநாட்டுவரன் அமையும்.

வியாபாரம் சம்பந்தமாக பயணம் வரும். சிலர் புதிதாக வணிகத்தில், முதலீடு செய்வர். சிலர் சினிமா விநியோகஸ்தராக மாறுவர். எந்த வியாபாரம் ஆரம்பித்தாலும், அதில் அலை ச்சல் அதிகமாக இருக்கும்.

### எதிர்பாராத இடையூறுகள்

ஒவ்வொரு வருடமும், ஏதோ ஒருவித துன்பம் வரத்தான் செய்யும். எனினும் மேஷ ராசியருக்கு வரும் துன்பங்களும். இடையூறுகளும். நீர்க்குமிழி போல் காணாமல் போய்



விடும் உங்கள் தொழிலில், அரசியல்வாதிகள் மூலம் பெரும் சங்கடம் ஏற்பட இருந்து, அது இன்னொரு அரசியல் பிரமுகரால் நீங்கி விடும்.

### அதிர்ஷ்டம்

இந்த வருடம் யோகம் எங் குள்ளது எனத் தேட வேண்டாம். அது உங்கள் கையில், உங்களிடமே உள்ளது. உங்களில் அனேகருக்கு. பூர்வீகம் சம்பந்தமான ஒரு அதிர்ஷ்ட நிகழ்வுண்டு. வாரிசுகள் உங்களுக்கு ஒரு யோக விடயத்தைக் கொடுப்பர். சிலர் வெளிநாடு அல்லது தந்தை சார்ந்து நல்மகிழ்வு பெறுவர். சிலரின் திருமணம் ஒரு வாழ்வின் உயர்வை கைகாட்டும். அரசு மிக மேன்மை தரும். ஆக, இந்த வருடம் முழுவதும் நல்ல யோகம் தரும் அமைப்பு உள்ளது. நன்கு அனுபவித்து மகிழுங்கள்.

### தொழில்

இந்த வருடம் தொழில் புரிவோர் சற்று கவனமாக இருக்க வேண்டும். இதனால் லாபத்தின் அளவு உங்களுக்கு குறைவாகக் கிடைக்கும் நிலை உருவாகும். எனவே, இந்த வருடம் தொழில் நிலை சிறப்பை வெளியில் சொல்லாமல் இருப்பது நல்லது.

### லாபம்

இந்த வருடம் உங்கள் ராசிநாதனே, லாபஸ்தானத்தில் நன்கு அமர்ந்துள்ளார். எனவே லாபத்திற்கு கேட்பானேன். அதுபாட்டுக்கு மடை திறந்த வெள்ளமாய் வரும். இதில் ஒரு விடயம் என்னவெனில், ஒரு லாபம் என்பது சும்மா வராமல், ஒரு இம்சையைக் கூடவே கூட்டிக் கொண்டு வரும்.

மற்றும் நீங்கள் நினைக்கும் எண்ணங்கள் நன்கு நிறைவேறும் அதில் ஒரு கள்ளத்தனமும், கபடமும் நிறைந்திருக்கும்.

### அரசியல்

இந்த வருடம் மேஷ ராசியில் நிறைய ஜாதகர்கள், அரசியல் பிரவேசம் செய்வர். அரசியலில் அடிப்படை சூதும் வாதும் தானே! அது இவர்கள் கற்று தேர்ந்து விட்டுத்தான் அரசியல் என்ட்ரி கொடுப்பர். இந்த வருடம் இந்த அரசியல் வழியாக, நிறைய இரகசிய பயணம், வெளியே தெரியாத பரிவர்த்தனைகள், அன்டர் கிரவுண்ட் வேலை என படு சுறுசுறுப்பாக இருப்பர்.

### விரயம்

இந்த வருடம் சுப விரயம். மகிழ்ச்சியான செலவுகள் நிறைய இருக்கும் வெளிநாட்டு பயணம், திருட்டுத்தனமான செலவுகள், முன்பு வாங்கிய கடனை அடைக்கும் செலவு, நிறைய முதலீடு என செலவும், பயணமும் இருந்து கொண்டே இருக்கும்.

ஆக, மேஷ ராசியாருக்கு இந்த குரோதி புது வருடம் மிக நன்மைகள் தரப் போகிறது. உங்கள் உயர்வை பொறுக்க முடியாமல், சில பல இடையூறுகள் வரும்தான். ஆனால் அதனை சமாளித்து விடலாம். செலவும் நிறைய இருக்கும். கொஞ்சம் கவனமாக இருங்கள். மற்றபடி சரி தான் உங்களுக்கு இந்த புதுவருடம் 80 சதவிகிதம் புள்ளி தரும்.

### பரிகாரம்

வீரபத்திரரை விளக்கேற்றி வணங்குவது நல்லது. முருகனை வழிபடவும்.

சனி, செவ்வாய் சேர்க்கை இருப்பதால் பைரவருக்கு, செவ்வாய்க்கிழமையில், செவ்வரளிப்பு, சாம்பார் சாதம் இவற்றோடு மண் அகல் விளக்கில் இலுப்பை எண்ணெய் ஊற்றி, 27 மிளகை மூட்டை கட்டி, சிவப்பு நிற திரியில் விளக் கேற்றி வணங்கவும்.


திருமணமான புது தம்பதிகளுக்கு. படுக்கை, தலையணை, மெத்தை என உங்களுக்கு முடிந்த உதவிகளை தேவையறிந்து செய்யவும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# பரபரப்பாகிய இந்திய தேர்தல் களம்
## இறுதிக்கட்ட பிரசாரத்தில் அரசியல் தலைவர்கள்



(டில்லி)

இந்திய பாராளுமன்ற தேர்தல் பிரசாரம் நிறைவடையவுள்ள நிலையில், இறுதிக்கட்ட பிரசாரத்தில் அரசியல் கட்சி தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் நிலையில், தேர்தல் பிரசாரம் நாளை 17 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இறுதிக்கட்ட பிரசாரத்தில் அரசியல் கட்சி தலைவர்கள் ஈடுபட்டுள்ளதால் அரசியல் களம் பரபரப்பாகி உள்ளது. (நி-6)

# ஈரான் மீது பதில் தாக்குதல் நடத்த வேண்டாம்
## இஸ்ரேலை வலியுறுத்தும் ஐரோப்பிய நாடுகள்

(பாரிஸ்)

இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடத்த வேண்டாம் என பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா இஸ்ரேலை வலியுறுத்தியுள்ளது.

ஈரான் - இஸ்ரேல் பதற்றம் மேலும் தீவிரமடையாமல் இருப்பதற்கு இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்த கூடாது எனவும் இதனை தடுக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மாக்ரோன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பாதுகாப்பை உறுதிப்படுத்த இஸ்ரேலின் பக்கம் பிரான்ஸ் நிற்கும் எனவும் இது தொடர்பில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் கலந்துரையாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.





இதேவேளை பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் டேவிட் கேமரூனும் இஸ்ரேலை பதிலடி கொடுக்க வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் காசாவில் போர் நிறுத்தம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈரானின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க முழு உரிமையும் இஸ்ரேலுக்கு இருந்தாலும் அவ்வாறு செய்தால் மத்திய கிழக்கில் மேலும் முரண்பாடு அதிகரிக்கும் என டேவிட் கேமரூன் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# ஆபிரிக்க நாடுகளில்
## இருமல் மருந்துக்கு தடை

(கெய்ரோ)

நச்சுத்தன்மையால் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாக சந்தேகிக்கப்பட்டதைத் தொடர்ந்து இருமல் மருந்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா, கென்யா, நைஜீரியா, ருவாண்டா, தான்சானியா உள்ளிட்ட நாடுகளில் பிரபல மருந்து தயாரிப்பு நிறுவனமான ஜான்சன் அண்ட் ஜான்சனின் இருமல் மருந்து விற்கப்பட்டு வந்தது.

குறிப்பாக 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்த மருந்தை மருத்துவர்கள் பரிந்துரைந்து வந்தனர். இந்தநிலையில் இந்த மருந்தை குடித்த குழந்தைகள் பலருக்கு உடல் நலக்கோளாறு ஏற்பட்டது.

இதனையடுத்து அந்த மருந்தை அந்தந்த நாடுகளின் சுகாதாரத்துறை அமைச்சகங்கள் சோதித்தன.

அதில் இருமல் மருந்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிக அளவிலான வேதிப்பொருட்கள் இருந்துள்ளது. இதனால் அதை குடிக்கும் குழந்தைகளின் உடலில் நச்சுத்தன்மை உண்டாகி உடல்நலக் கோளாறு ஏற்பட்டது தெரிய வந்தது.

இதனையடுத்து தென் ஆபிரிக்கா, கென்யா, தான்சானியா உள்ளிட்ட சில ஆபிரிக்க நாடுகளில் இந்த மருந்துக்கு தடை விதிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனம் விற்ற அனைத்து மருந்து பாட்டில்களையும் திரும்பப் பெற உத்தரவிடப்பட்டுள்ளன. (நி-6)

இன்னொ

ஐ. நா

(ஜெனீவா)

மத்திய கிழக்கு

இன்னொரு பே

செயலாளர் அ

வித்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஈரான் சுமார் 300 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியமை தொடர்பில்

ஆப்கானிஸ்தான

33 பேர் உ



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடந்த 3 நாட்களாக பெய்து வரும் கன மழை மற்றும் திடீர் வெள்ளத்தில் சிக்கி 33 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பேரிடர் மேலாண்மை துறை தெரிவித்துள்ளது.


அதன்படி கடந்த வெள்ளிக்கிழமை முதல், மழையின் காரணமாக திடீர் வெள்ளம் ஏற்பட்டதுடன் அதிக மனித மற்றும் நிதி இழப்புகளை ஏற்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த உலகம்

# ...னொரு போரைத் தாங்காது!

## ...ா கவலை தெரிவிப்பு




**...ழக்கு பிராந்தியமோ அல்லது இந்த உலகமோ ... போரை தாங்காது என்று ஐ.நா. பொதுச் ... அன்டோனியோ குட்டரஸ் கவலை தெரி...ர்.**

கருத்து தெரிவிக்கையிலே அவர் இதனை தெரித்தார்

அதன்படி மத்திய கிழக்கு பிராந்தியம் போரின் விளிம்பில் நிற்கிறது. அந்தப் பிராந்திய மக்கள் முழு வீச்சு போரை எதிர்கொள்ளும் அபாயத்தில் உள்ளனர்.

இத்தருணத்தில் உடனடியாக பதற்றத்தை தணிக்க வேண்டும் என்றும் பழிக்குப் பழி என இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய வான்வழி தாக்குதலைக் கண்டிக்கிறோம் ஆகையால் வெறுப்புகளை முன்னெடுக்காமல் நிறுத்துங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-6)

## ...தானில் கனமழை
## ...உயிரிழப்பு



இதில் 600 வீடுகள் சேதமடைந்ததுடன் 200 கால்நடைகளும் அழிந்துள்ளன.

மேலும் சுமார் 800 ஏக்கர் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் நாட்டின் 34 மாகாணங்களில் 20 மாகாணங்கள் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பேரிடர் மேலாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

(நி-6)

## “இஸ்ரேலிற்கு மரணம்! அமெரிக்காவிற்கு மரணம்!” மகிழ்ச்சியில் ஆர்ப்பரிக்கும் ஈரானியர்கள்

(டெஹ்ரான்)

இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் தாக்குதலுக்கு, ஈரானிய மக்கள் வீதிக்கிறங்கி ஆதரவை வெளியிட்டு வருகின்றனர்.

இஸ்ரேல் மீது ஈரான் முன்னொருபோதும் இல்லா தளவில் பாரிய ஏவுகணை மற்றும் ஆளில்லா விமான தாக்குதலை நடத்தியுள்ளது.

இத் தாக்குதலுக்கு, மகிழ்சியை வெளிப்படுத்தியுள்ள ஈரானிய மக்கள், “ஆண்டவனின் வெற்றி நெருங்கிவிட்டது”, “அடுத்த அடி மிக மோசமானதாக காணப்படும்”, “இஸ்ரேலிற்கு மரணம் அமெரிக்காவிற்கு மரணம்” போன்ற பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களையும் எழுப்பியுள்ளனர்.



டெஹ்ரானின் பாலஸ்தீன சதுக்கத்தில், பாலஸ்தீன கொடிகளுடன் கூடிய ஆயிரக்கணக்கான மக்கள், இவ்வாறு இஸ்ரேலுக்கு எதிராகவும் ஈரானுக்கு ஆதராவாகவும் குரல் கொடுத்து வருகின்றனர்.

சமீபத்தில் சிரியாவின் டமாஸ்கசில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், அங்குள்ள ஈரான் தூதரகம் கடும் சேதமடைந்ததுடன், இரண்டு தூதரக அதிகாரிகள் உட்பட ஏழு வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், இஸ்ரேல் மீது பெருமளவான ஆளில்லா



விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈரானின் நூற்றுக்கும் அதிகமான ட்ரோன்கள் இஸ்ரேலை வந்து தாக்கின.

இத் தாக்குதலால் மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்துள்ளது. ஈரானின் நடவடிக்கைக்கு ஜேர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

மேலும் ஈரானின் தாக்குதலில் இஸ்ரேலின் தென்பகுதியில் உள்ள இராணுவத்தளமொன்று சேதமடைந்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஈரான் செலுத்திய ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் பலவற்றை இஸ்ரேலின் எல்லைக்குள் வைத்து செயல் இழக்கச் செய்துவிட்டதாக இஸ்ரேலின் இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.


மேலும் ஈரான் இஸ்ரேலை நோக்கி செலுத்திய அனைத்து ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களை செயல் இழக்கச் செய்வதில் அமெரிக்கா இஸ்ரேலிற்கு உதவியதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதலால், மறு உத்தரவு வரும்வரை, இந்தியர்கள் இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு சுற்றுலா செல்வதை தவிர்க்குமாறு இந்திய வெளியுறவுத்துறை அறிவுறுத்தியுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணித்தியாலத்திற்குள்

## 8 வீதி விபத்துக்கள்: 10 பேர் உயிரிழப்பு



(கொழும்பு)

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் 8 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இந்த வீதி விபத்துக்கள் காரணமாக 10 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த 8 விபத்துக்களில் 5 விபத்துக்கள் வீதியில் வாகனம் சறுக்கிச் சென்றதன் காரணமாகவே இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, சாரதிகளின் கவனக்குறைவால் பல வீதி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. போக்குவரத்து விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்றுமாறு சாரதிகளைக் கேட்டுக்கொள்வதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (நி-6)

# இலங்கைக்கு கிடைத்துள்ள பல மில்லியன் டொலர்கள்

(கொழும்பு)

வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களால் இலங்கைக்கு அனுப்பப்படும் பணம் அதிகரித்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி, வெளிநாட்டு ஊழியர்கள் அனுப்பும் பணம் கடந்த ஆண்டை விட 8.7 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அந்தவகையில், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு 1,536.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 170 | 140 | 120-150 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 165 | 180 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 250 | 130-160 | 200 |
| தக்காளி | 80 | 50 | 130 | 80-100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 100-130 | 160 |
| கோவா | 200 | 200 | 200 | 250 | 300 |
| கரட் | 350 | 400 | 350 | 450 | 450 |
| பூசணி | 160 | 130 | 140 | 90-110 | 120 |
| புடோல் | 140 | 200 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 320 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 350 | 380 | 400 | 270 | 300 |
| பாகற்காய் | 250 | 300 | 300 | 300 | 300 |
| வெண்டைக்காய் | 120 | 130 | 100 | 100-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 300 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 350 | 300 | 200 | 300-350 | 120 |
| லீக்ஸ் | 350 | 350 | 250 | 230 | 350 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 200 | 350 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 600 | 600-1000 | 800 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 130 | 160 | -- | 140 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 400-600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 100 | 100 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 400 | 450 | -- | 350 |
| வெங்காயப்பூ | -- | -- | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 80 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 120 | 100 | |

# இன்று ஒரு தகவல் 96



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஜலதோசம்

ஒரு கல்யாண ஏற்பாடு நடந்து கொண்டு இருந்தது. பெண், மாப்பிள்ளைக்கு ஜாதகப் பொருத்தம் பார்த்து கொண்டு இருக்கின்றார்கள். பொண்ணுக்கு செவ்வாய் தோஷம் மாப்பிள்ளை எப்படி? என்றனர்.பெண் வீட்டுக்காரர். ஜலதோஷம் தான் என்றனர். மாப்பிளை வீட்டுக்காரர். என்னங்க அப்படி சொல்லுகின்றீர்கள்? மாப்பிளை பெரிய டொக்டர் தானே அவருக்குமா ஜலதோஷம்? என்றார் இன்னொருத்தர். ஜலதோஷம் என்னங்க... ஆளைப் பார்த்து விட்டா வருகிறது? அது பாட்டுக்கு வந்து விடுகிறது இவர் டொக்டர். அதனாலே இவரிடம் நாம் போகக் கூடாது என்று ஜலதோஷம் நினைப்பது இல்லையே! அதிகமாக நோயாளிகளை நெருங்கிப் பார்ப்பதாலே அவருக்கும் தான் அடிக்கடி வருகிறது. இந்த ஜலதோஷத்திற்கு காரணமாக இருப்பது 'ரினோ' என்கின்ற வைரஸ்!

1950 இற்குப் பிறகு தான் இந்த ரினோ வைரஸை தனியாக பிரித்து எடுக்க முடிந்ததாம். அதன் பிறகு இந்த வைரஸினுடைய ரகசியங்களைக் கண்டுபிடிக்கிறதுக்குப் மிகவும் கஷ்டப்பட்டு இருக்கின்றார்கள் நிறைய பணம் எல்லாம் செலவு செய்து இருக்கின்றார்கள். இதனுடைய எடை, நீளம், அகலம் இதையெல்லாம் கண்டுபிடித்து விட்டார்கள்! இதனுடைய உறுப்புக்களை அக்கு அக்காக பிரித்து விட்டு மறுபடியும் கோர்த்து விடுவதற்கு கூட கற்றுக் கொண்டார்கள்.

ரினோ வைரஸோட மேலுறை 130 செல்சியஸ் டிகிரி சூட்டையும் புவியீர்ப்பு அழுத்தத்தைப் போல 10 000 மடங்கு அதிகமான அழுத்தத்தையும் தாங்கக் கூடியது என்று கண்டுபிடித்தார்கள். ஆனாலும் எது முக்கியமோ அதை இன்னமும் கண்டுபிடித்தபாடில்லை! மருந்து தான். ரினோ வைரஸ் இருக்கிறதே இதிலே 100 இற்கு மேற்பட்ட ரகங்கள் இருக்கின்றதாம். இதிலே இவ்வளவு ரகம் என்னத்திற்காக? இது எல்லாம் எப்படி உண்டாகியது? என்பது தெரியவில்லை! இவ்வளவு ரகம் இருக்கின்றதனாலே ஜலதோஷத்திற்கு என்று ஒரு வக்சீனை உருவாக்க முடியவில்லை. ஒவ்வொரு ரகத்திற்கும் ஒரு வக்சீனை உருவாக்கி எல்லாவற்றையும் கலந்து பொதுவாக ஒரு கலவை வக்சீனை உருவாக்க வேண்டும்.

ஜலதோஷம் எப்படி பரவுகிறது என்பதை கண்டுபிடிக்கிறதிலே தான் இப்போதைக்கு மருத்துவர்கள் அக்கறை காட்டி வருகின்றார்கள். ஜலதோஷம் ஒருத்தரிடம் இருந்து இன்னொருத்தரிடம் சுலபமாக தொற்றும். நெருக்கமாக பழகுவது. ஜலதோஷம் பிடித்தவர்கள் பொருளை மற்றவர்கள் பயன்படுத்துவது இவையெல்லாம் அது பரவுவதற்கு மிகவும் உதவியாகும்.

பொதுவாகவே சில குறிப்பிட்ட உடற்கோளாறு உள்ளவர்களுக்குத் தான் அடிக்கடி ஜலதோஷம் ஏற்படுகின்றது. யூஸ்டேசியன் குழல்கள் அடைபட்டு இருக்கின்றது சைனஸ் கோளாறு, வாயைத் திறந்து கொண்டே தூங்குவது இவையெல்லாம் ஜலதோஷத்திற்கு மிகவும் சாதகமாக இருக்கும். வாயைத் திறந்து கொண்டே தூங்கும் போது சவ்வுப் பரப்புக்கள் உலர்ந்து போய்விடுகிறது. இது வைரஸ் வளர்வதற்கு மிகவும் சௌகரியமாக போய்விடுகிறது.

ஜலதோஷத்தைப் பற்றி இது வரைக்கும் பல பேர் வைத்து இருக்கின்ற அபிப்பிராயத்தை எல்லாம் இனிமேல் கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டியது தான். ஏன் தெரியுமா? இப்போது நான் சொல்லப்போகின்ற விடயம் எல்லாம் நிபுணர்கள் சொல்லியிருக்கின்ற விடயங்கள். குளிர்காலத்திலே நடமாடுவதற்கும் ஜலதோஷம் வருவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. விற்றமின் சி இருக்கிறதே இது ஜலதோஷத்தை தடுக்கவோ குணப்படுத்தவோ செய்யாது.

கிருமிக்கொல்லிகள் சாதாரண ஜலதோஷத்தை தீர்க்காது. அஸ்பிரின் – பரசிட்டமோல் இது சம்பந்தப்பட்ட மாத்திரைகள் எல்லாம் ஜலதோஷத்தினாலே ஏற்படுகின்ற தலைவலி யையும் தணிக்குமே தவிர ஜலதோஷத்தை நிறுத்திவிடாது. நிறைய திரவங்களை பருகினால் தொண்டை வறட்சி குறையும் ஆனால் ஜலதோஷம் போய்விடாது. பின்னர் இதற்கு என்ன தான் செய்வது? அது தான் ஒருத்தருக்கும் தெரியவில்லையே!

வைரஸ் படையெடுப்பு ஆரம்பித்ததிலிருந்து 96 மணி நேரம் கழிந்து ஒரு அதிசயம் நடக்கின்றது என்ன தெரியுமோ? ரினோ வைரஸ் புதிதாக செல்களை தாக்குவதை நிறுத்துகின்றது. உடல் திரவங்கள் பெருகி செல்களின் வைரஸ்களை கழுவி வெளியேற்றி விடுகிறது.

அது சரி இந்த வைரஸ் ஏன் இப்படி திடீரென்று தன்னுடைய தாக்குதலை நிறுத்துகிறது? இதுவும் பெரிய புதிராக இருந்து கொண்டு இருக்கின்றது. ஜலதோஷம் வாரக் கணக்கிலே இல்லை என்றால்? மாதக்கணக்கிலே ஏன் தொடர்ந்து நீடிக்கிறதில்லை? இதுவும் யாருக்கும் தெரியவில்லை?

அது தான் ஒருவர் சொன்னார். ஜலதோஷத்திற்கு மருந்து கொடுக்கவில்லை என்றால் 96 மணி நேரத்திலே சௌகரியம் ஆகும்! மருந்து கொடுத்தால் 4 நாட்களிலே சௌகரியம் ஆகிவிடும் என்றார். அப்படி என்றால் என்ன அர்த்தம்? இரண்டும் ஒன்று தான்! உங்களிடம் யாராவது வந்து ஜலதோஷத்திற்கு ஏதாவது மருந்து இருந்தால் கொடுங்கள் என்று கேட்டால் நாலு நாட்கள் கழித்து வாருங்கள் என்று தாராளமாக சொல்லிவிடுங்கள். நாலு நாள் கழித்து அவர் உங்களிடம் வரமாட்டார். ஏன் என்றால் நாலு நாளிலே ஜலதோஷம் அவருக்கு டாட்டா காட்டிவிட்டு போயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபோதையில் சாரத்தியம் பேருந்து சாரதி கைது

(குருமன்காடு)

புத்தாண்டு தினத்தில் மது போதையில் தனியார் பேருந்தினை செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டு தினத்தினை முன்னிட்டு கடந்த ஒரு வாரமாக நாடு முழுவதும் போக்குவரத்து பொலிஸாரினால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அந்த வகையில், வவுனியா மாவட்டத்திலும் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தமையுடன் மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் நடவடிக்கையினையும் முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது, மதுபோதையில் வாகனத்தினை செலுத்திய குற்றச்சாட்டில் தனியார் பேருந்தின் சாரதியினை பொலிஸார் கைது செய்தமையுடன், பேருந்தினையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். சாரதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(நி-6-250)

# துணுக்காய் கரம்பை குளத்தில்

# சிறுபோக நெற்செய்கை முன்னெடுப்பு

## 74 விவசாயிகளுக்கு அரை ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு,துணுக்காய் கரம்பைக் குளத்தின் கீழ் 74 விவசாயிகள் தலா அரை ஏக்கர் வீதம் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் அமைந்துள்ள கரம்பைக்குளத்தின் கீழ் உள்ள 74 விவசாயிகளுக்கு தலா அரை ஏக்கர் வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் பெரும்போகத்தில் யானைகளின் அட்டகாசம், நோய்த்தாக்கம் என்பவற்றால் பாரிய நட்டத்தினை எதிர்கொண்டதாக தெரிவித்த விவசாயிகள் இப் போகத்திலாவது விளைச்சல் கிடைக்க வேண்டும் என தெரவித்துள்ளனர். (நி-6)




# வவுனியா மாமடுப் பகுதியில் யானைதாக்கி ஒருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா, மாமடுப் பகுதியில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாமடுப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் மாலை வவுனியா, மாமடு - கள்ளிக்குளம் வீதியில் நபர் ஒருவர் பயணித்த போது வீதியில் நின்ற யானை குறித்த நபர் மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு அங்கிருந்து சென்றுள்ளது.

பின்னர் அவ் வீதியால் சென்றோர் தாக்குதலுக்குள்ளான நபரை வவுனியா மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் மாமடுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மாமடு - கள்ளிக்குளம் வீதியில் உள்ள பல காணிகளில் வீடுகள் கட்டப்பட்டுள்ள போதும், அவ் வீடுகளில் பலரும் குடியிருக்காமையால் அப்பகுதி பற்றை காடுகளாக மாறியுள்ளதுடன் காட்டில் இருந்து வரும் யானைகள் அப் பற்றைகாடுகளின் ஊடாக வீதிக்கு வருகை தருவதாகவும், தினமும் அப் பகுதியில் நடமாடித் திரிவதுடன் வீதியில் செல்வோரை தாக்க முயற்சிப்பதாகவும் அப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர்.(நி-6-250)

# கைகலப்பில் முடிவடைந்த

## வாய்த்தர்க்கம்- ஒருவர் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் மதுபோதையில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக ஒருவர் காலில் படுகாயமடைந்துள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் வசிக்கும் இருவருக்கு இடையில் மதுபோதையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாகமாறியுள்ளது.

இதன்போது, ஒருவர் மணவெட்டியினை எடுத்து ஒருவரின் காலில் கொத்தியுள்ளார். இதனையடுத்து காலில் கடும் காயங்குள்ளான 27 வயது நபர் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசன்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-6-250)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3091

அபிராமி




சர்மி




கீர்த்தனா




நதீஸ்




வருண்




கிசோர்





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பாகம் - 2 பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 456





பூங்குழலி! பூங்குழலி! இங்கே வா!" என்று கூவினார்.

பலபலவென்று பொழுது விடியும் சமயத்தில் பூங்குழலி குதிரையின் காலடிச் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டாள். ஊமை ராணி குதிரை மேல் ஏறிப் புறப்படுவதைப் பார்த்தாள். அவளைத் தடுப்பதற்காக எழுந்து ஓடினாள். அவள் கப்பலில் இருந்து இறங்கிக் கரைக்குச் செல்வதற்கு முன்னால் குதிரை பறந்து சென்று விட்டது.

உதய நேரம் மிக்க மனோகரமாயிருந்தது. பூங்குழலியின் உள்ளத்தில் என்றுமில்லாத உற்சாகம் ததும்பியது. அங்கிருந்தபடியே கப்பலின் மேல் தளத்தைப் பார்த்தாள். இளவரசர் தூங்கிக் கொண்டிருந்தார். பூங்குழலி நதிக்கரையோரமாகப் பறவைகளின் இனிய கானத்தை கேட்டுக் கொண்டு நடந்தாள். ஒரு மரத்தின் வளைந்த கிளையில் ஒரு பெரிய ராட்சசக் கிளி உட்கார்ந்திருந்தது. பூங்குழலியைக் கண்டு அது அஞ்சவில்லை. "எங்கே வந்தாய்?" என்று கேட்பது போல் அவளை உற்றுப் பார்த்தது.

"கிளித்தோழி! இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் இளவரசர் இங்கிருந்து போய் விடுவார். பிறகு எனக்கு நீதான் துணை. என்னோடு பேசுவாய் அல்லவா?" என்று பூங்குழலி கேட்டாள்.

அச்சமயம் "பூங்குழலி! பூங்குழலி!" என்ற குரல் கேட்டது முதலில் கிளிதான் பேசுகிறது என்று நினைத்தாள். இல்லை குரல் கப்பலிலிருந்து வருகிறது என்று உணர்ந்தாள். இளவரசர் அழைக்கிறார் என்று அறிந்து குதித்தோடினாள். ஆனால் கப்பல் மேலேறிப் பார்த்தபோது இளவரசர் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தார். பூங்குழலி அவர் அருகில் சென்ற போது அவருடைய வாய் மீண்டும் "பூங்குழலி!" என்று முணுமுணுத்தது. உடல் புளகாங்கிதம் கொண்ட அப்பெண் இளவரசரின் அருகில் சென்று அவருடைய நெற்றியைத் தொட்டு எழுப்பினாள்.

இளவரசர் உறக்கமும், கனவும் கலைந்து எழுந்தார். கீழ்த்திசையில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். பூங்குழலியின் முகம் மலர்ந்த செந்தாமரையைப் போல் பிரகாசித்தது. "என்னை அழைத்தீர்களே, எதற்கு?" என்று கேட்டாள்.

"உன் பெயரைச் சொல்லி அழைத்தேனா என்ன? தூக்கத்தில் ஏதோ பேசியிருப்பேன். நீ நேற்றிரவு தூங்கிக் கொண்டே பாடினாயே! நான் தூக்கத்தில் பேசக்கூடாதா?" என்றார்.

இளவரசர் குதித்து எழுந்தார். "ஓகோ! இத்தனை நேரமா தூங்கிவிட்டேன்! பெரியம்மா எங்கே?" என்று கேட்டுச் சுற்று முற்றும் பார்த்தார். அந்த மூதாட்டி அதிகாலையில் குதிரை ஏறிப் போய்விட்டதைச் சமுத்திர குமாரி கூறினாள்.

"நல்ல காரியம் செய்தாள்! சமுத்திரகுமாரி! உன் களைப்புத் தீர்ந்து விட்டதாகக் காண்கிறது. நீயும் இனி விடை பெற்றுக் கொள்ளலாம். என் நண்பர்கள் வரும் வரையில் நான் இங்கேயே இருக்க வேண்டும். அதுவரை இந்தக் கப்பலைச் சோதித்துப் பார்க்கப் போகிறேன்" என்றார்.

பூங்குழலி, "அதோ! அதோ!" என்று சுட்டிக்காட்டினாள். அவள் காட்டிய திசையை இளவரசர் நோக்கினார். கடலில் வெகு தூரத்தில் ஒரு பெரிய மரக்கலம் தெரிந்தது. கடற்கரையோரமாக ஒரு சிறிய படகு வருவதும் தெரிந்தது. படகிலே ஐந்தாறு பேர் இருந்தார்கள்.

"ஆகா! இப்போது எல்லா விவரங்களும் தெரிந்து போய் விடும்!" என்றார் இளவரசர்.

தாம் அங்கிருப்பது தெரியாமல் ஒருவேளை படகு கடற்கரையோடு போய் விடலாம் என்று இளவரசர் அஞ்சினார். ஆகையால் உடனே புதைந்த கப்பலிலிருந்து கீழிறங்கி நதிக்கரையோரமாகக் கடற்கரையை நோக்கிச் சென்றார். பூங்குழலி அவரைத் தொடர்ந்து சென்றாள். யானையும் அவர்களைப் பின் தொடர்ந்து அசைந்தாடிக் கொண்டு சென்றது. கடற்கரையில் போய் நின்றார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஒரு வாய் பேரம்

ஒருநாள் மனேரம்மியமான மாலைப் பொழுதிலே முதியவன் ஒருவன் ஒரு கிராமத் தின் வழியே போய்க் கொண்டிருந்தான். மாலையின் மோகனத்தைக் கூட்டுவ தாய் இனிமையான கீதம் ஒன்று, ஒரு வீட்டுக்குள்ளேயிருந்து வந்தது. சொக்கிப் போன கிழவன், பாட்டு முடிகிறவரை பாதையிலேயே நின்று கேட்டான்.



பிறகு வீட்டருகே சென்று உள்ளே பார்த்தான். பாடியவள் ஒரு சின்னப்பெண். அன்புடன் அவளைத் தட்டிக்கொடுத்து, தங்கக்காசு ஒன்றை பரிசாகக் கொடுத்தான். பெண்ணின் தந்தை பொன்னன் அப்போது அருகே இருந்தான். நம் மகள் பாடிய பாட்டுக்கு தங்கக் காசா! என மகிழ்ந்தான்.

உடனே பெண்ணின் கையிலிருந்து பணத்தைப் பிடுங்கிக் கொண்டான். பிறகு கிழவன் புறப்படத் துவங்கியதும், "நில்லும் ஐயா, எனக்குத் தரவேண்டிய பாக்கி எங்கே?" என்று பொன்னன் கத்தினான். வயோதிபன் வியப்பு மிகுதியுடன் அவனைப் பார்த்தான். அவன் மேலும் சொன்னான், "இதோ பார், கிழவனாரே என் பெண்ணின் பாட்டைக் கேட்டு மகிழ்வதற்கு விலை, ஒரே ஒரு தங்கக் காசு இல்லை. பத்து காசுகளாகும். பாக்கியைக் கீழே வை நீ சீக்கிரம்" என்றான். இந்த ஆள் ஒரு போக்கிரி என்பதைப் புரிந்து கொள்ள கிழவனுக்கு அதிக நேரம் ஆகவில்லை.

இருந்தாலும் அப்பாவி போல் நடித்துக் கொண்டு, "சிறு இசைவாணியின் பெரும் புகழ்த் தந்தையே, இந்தச் சிறியேனிடம் தங்கக் காசு மேலும் இல்லை, அதற்காக வருந்துகிறேன், இப்போது நான் என்ன செய்வேன்" என்றான். "உன்னுடைய குல்லாவையும், தங்கச் சங்கிலியையும் செருப்பையும் கொடேன்"என்றான் பொன்னன்.

"இவ்வளவு புத்திசாலித்தனம் நிறைந்த தலைக்கு கட்டாயம் குல்லா வேண்டியது தான். அந்தத் திருத்தலையைத் தாங்கிடும் பொன்னான கழுத்திற்குத் தங்கச் சங்கிலியும் வேண்டியது தான். ஆனால் நண்பா, இவை பழையவை, மதிப்பற்றவை. என் வீட்டுக்கு வாயேன்! சொக்கத் தங்கமாய் ஒரு நூறு தந்திடுவேன்! இப்போது நான் கொடுத்த தங்கக்காசு கூட அவ்வளவாய் நல்லது இல்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் சிந்தனைகளின் பலனே நம் வாழ்வின் தற்போதைய நிலை. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொது வேட்பாளரை நிறுத்தினால் ஒப்பீட்டுக் கோட்பாடு பிழைக்காதா?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என ஒரு தரப்பும் பொது வேட்பாளரை நிறுத்தக்கூடாது என இன்னொரு தரப்பும் தர்க்கம் புரிகின்றன.

இங்கு தரப்புகள் என்பது தமிழ் அரசியல் தரப்புகளையே சுட்டி நிற்கும்.

அந்த அடிப்படையில், பொது வேட்பாளர் என்ற விடயத்தில் ஒரு கட்சிக்குள்ளேயே வேறுபட்ட கருத்து நிலைகள் இருப்பதைக் காண முடிகிறது.

உதாரணத்துக்கு தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஆகியோர் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டுமென்பதில் உறுதியாகவுள்ளனர்.

அதேநேரம் தமிழரசுக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தர் ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பொது வேட்பாளரை நிறுத்தக்கூடாது எனக் கருத்துரைத்துள்ளனர்.

பொது வேட்பாளர் விடயத்தில் தமிழரசுக் கட்சி தன்னளவில் ஒன்றுகூடி, ஏகமனதான முடிவை எடுப்பதில் கூட, சிக்கல் உள்ளதென்பது தெரிகிறது.

ஆம், இனி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைமை இதுதான் என்பதை பொது வேட்பாளர் என்ற விவகாரத்தின் மூலமாக நாம் உணர முடியும்.

அதாவது, தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் தமது வீட்டுக்குள் கன்னை பிரிந்து நின்று இரு தரப்பாகக் கருத்துரைப்பர். இதுவே எதிர்காலத்தில் நடக்கும் என்பதையே மேற்போந்த சம்பவம் அறுதியிட்டுக் கூறுகிறது.

அதற்கான ஒத்திகையாக பொது வேட்பாளர் என்ற விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதென்பதுடன் அந்த விடயத்தை ஒத்தி வைக்கலாம்.

இங்கு பொது வேட்பாளர் என்ற விடயத்தில் நமது கருத்து; தமிழ் மக்களின் அபிப்பிராயங்களை பெற்றுக் கொள்ளுங்கள். தமிழ் மக்களின் அபிப்பிராயங்களை எடுக்காமல், நீங்கள் உங்கள் பாட்டில் முடிவுகளை எடுப்பீர்களாயின், அதன் விளைவு மிக மோசமானதாக இருக்கும்.

தவிர, பொது வேட்பாளர் என்ற விடயத்தில் தமிழ் மக்களின் அபிப்பிராயத்தில் எது மேலோங்கி உள்ளதோ, அதனைக் கைகூப்பி ஏற்றுக் கொள்வதுதான் பிரஸ்தாப விவகாரத்துக்கான தீர்வு என்பது நம் தாழ்மையான கருத்து.

அதேநேரம் தமிழ் மக்கள் சார்பாக சில கருத்துக்களை முன்வைக்கின்ற கடமைப்பாடும் நமக்கு உண்டு.

அந்த வகையில் தமிழ் மக்கள் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தும்போது, சிங்கள வேட்பாளர்களில் அவரைவிட இவர் நல்லம் என்று ஒப்பீட்டு ரீதியில் இடம்பெறக்கூடிய தெரிவை தமிழ் மக்கள் இழப்பார்கள் அல்லவா?

அந்த இழப்பு ஒப்பீட்டுக் கோட்பாட்டை தோற்கடித்து; ஒரு மோசமான இனவாதியை அதிகாரக் கதிரையில் அமர்த்தி விடக்கூடிய சந்தர்ப்பம் உண்டல்லவா?

அவ்வாறானதொரு சம்பவம் நிகழுமாயின், அதற்கு வழி சமைத்தவர்கள் நாம் என்ற குற்றச்சாட்டு ஏற்படலாம் என்றவாறு ஆராய்வதும் இங்கு அவசியமாகிறது.

### யாழில் மே முதல்

# இ.போ.ச- தனியார் இணைந்த நெடுந்தூர பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மே மாதம் 1 ஆம் திகதிமுதல் அரச மற்றும் தனியார் பேருந்துகள் வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் இருந்து பரீட்சார்த்தமான முறையில் நெடுந்தூர சேவைகள் முன்னெடுக்கப்படும் என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இ.போ.ச மற்றும் தனியார் இணைந்த பேருந்து சேவையை முன்னெடுப்பதில் இருந்துவரும் இழுபறி நிலையை அடுத்து யாழ். நீண்டதூர தனியார் பேருந்து சேவையில் ஈடுபட்டுவரும் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கான முறையான பேருந்து தரிப்பிடம் இல்லாமையால் எழுந்த பிரச்சினைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டை அடுத்து பரீட்சார்த்த அடிப்படையில் சேவைகளை நடத்துவது என சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது.

முன்பதாக முறையான பேருந்து தரிப்பிடம் இல்லாமையை கண்டித்து உள்ளூர்மற்றும்நீண்ட தூர தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் முன்னெடுத்துள்ள போராட்டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடி தீர்வு வழங்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் உறுதி வழங்கியிருந்தார்.

இதையடுத்து குறித்த விடயம் தொடர்பில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அரச மற்றும் தனியார் பேருந்து சேவையில் ஈடுபடும் தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சுமுகமான தீர்வு எட்டப்படாமையால் அன்றைய தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ் விடயம் தொடர்பில் வடக்கின் ஆளுநர் தலைமையில் 5 பேர் அடங்கிய விசேட குழு ஒன்றை நியமித்து பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் பொறிமுறைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரியிருந்த நிலையில் குறித்த குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பரீட்சார்த்த அடிப்படையில் சேவைகளை நடத்துவது என தீர்வு எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

### மீனவர்கள் விவகாரம்

## இந்திய மத்திய அரசாங்கத்துடனே பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்

### சுமந்திரன் எம்.பி

(கரணவாய்)

மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்துடனேயே பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

இழுவை மடி தொடர்பில் நான் கொண்டு வந்த தனிநபர் சட்ட மூலம் சட்ட மாக்கப்பட்டது. அதை நடைமுறைப் படுத்தாமல் இருந்தால் இந்த நிலை நீடிப்பதற்கான ஒரே ஒரு காரணமாக இருந்தது. தற்போது அது நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிகின்றேன்.

இழுவை மடி விவகாரத்துக்கு முடிவு கொண்டு வரப்பட வேண்டும் என 2016 ஆம் ஆண்டில் ஒரு கூட்ட அறிக்கையை இலங்கை - இந்திய அரசாங்கங்கள் விடுத்திருந்ததைத் தொடர்ந்து தான் அந்த சட்டமும் இயற்றப்பட்டது. மாநில அரசுக்கு இந்த இழுவைமடி படகுகளில் ஈடுபடுபவர்களுடன் சம்பந்தம் இருக்கலாம் ஆகையினாலே அவர்களுடனும் பேச வேண்டும் என்கின்ற ஒரு கருத்து இருக்கிறது என தெரிவித்தார். (நி-6-60)

## போதையில் குழப்பங்களை விளைவித்த 7 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புத் தாண்டு தினமான நேற்று முன்தினம் போதையில் குழப்பங்களை ஏற்படுத்தி மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 7 இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, யாழ். பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற இசை நிக[illegible] குழப்பங்களை ஏற்படுத்தி மோதலில் ஈடுபட்ட வன்முறை கும்பலில் 7 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் விசாரணைகளின் பின்னர் சட்ட வைத்திய அதிகாரியிடம் முற்படுத்தி மருத்துவ பரிசோதனையை மேற்கொண்ட பின்னர் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-33)

## நாவாந்துறை பகுதியில் இரு வாகனங்கள் தீயிட்டு எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் இரண்டு வாகனங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

பட்டாரக வாகனமொன்றும், முச்சக்கர வண்டி ஒன்றும் இவ்வாறு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

## சிறுபோக நெற்செய்கைக்காக இரணைமடுக்குளத்து நீர் திறந்து வைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர் பாசன குளமாக காணப்படுகின்ற இரணைமடு குளத்தின் கீழ் இவ்வாண்டு 15 ஆயிரத்து 690 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான இறுதி தீர்மானங்கள் எடுக்கப்பட்டு விவசாயிகள் நிலத்தை பண்படுத்துகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் 2024 ஆம் ஆண்டு சிறுபோக பயிர்செய்கைக்காக இரணைமடுக் குளத்து நீர் நேற்று பகல் திறந்து வைக்கப்பட்டது. வலது கரை வாய்க்கால் அருகில் அமைந்துள்ள ஒற்றைகை பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து திறந்து விடப்பட்டுள்ளது

அதேவேளை கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் நிறைவு பெற்றதை தொடர்ந்து இடது கரை வாய்க்காலுக்கான குளத்தின் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் (பதில்) சு.முரளீதரன் வட மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் ந. சுதாகரன் மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் பொறியியலாளர்கள் மற்றும் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா. தேவரதன் மற்றும் விவசாயிகள் பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-6-315)

### திருநெல்வேலி காயாரோஹண சுவாமி

## தேவஸ்தான மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகா ஸமேத ஸ்ரீ காயாரோஹண சுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 19 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறும்.

இவ் உற்சவத்தில் மே மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும், 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெற்று அன்று மாலை கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

10

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

கலெக்டர்களுக்கு உதவியாகவும், உள்ளூராட்சியை நிர்வகிப்பதற்கும் நோத் உள்நாட்டவர்களையே ஏற்படுத்தினர். இதனால் மக்கள் வர்த்தக சங்கத்தின் பழைய இந்திய உத்தியோகத்தரின் கொடுமைகளினின்று விடுதலை பெற்றனர். சிங்களப் பிரதேசங்களில் அத்தப்பத்து முதலியார் என்பவன் மாகாண நிர்வாகத்துக்குப் பொறுப்பாளியாக்கப்பட்டான். முதலியார்களும் முகாந்திரங்களும் மாவட்டங்களுக்கு பொறுப்பாயிருந்தனர். கிராமங்களின் பாலனம் ஆராச்சிகளினதும் விதானைகளினதும் கைகளில் விடப்பட்டது.

தமிழ்ப் பிரதேசங்களில் முதலியார் முழு மாகாணத்தையும் மேற்பார்வை செய்தார். அவனுக்குக் கீழ் மணியகாரன், உடையார், விதானை என்பவர்கள் முறையே மாவட்டங்களையும் பற்றுக்களையும் கிராமங்களையும் ஆட்சி செய்தனர். இச் சுதேச உயர் அதிகாரிகள், மாகாண அதிபதிகளின் சிபார்சுகளின் பேரில் ஆள்பதியினால் நியமிக்கப்பட்டனர். முகாந்திரத்துக்குக் கீழ்ப்பட்டவர்கள் மாகாண அதிபதிகளினாலேயே நியமிக்கப்பெற்றனர்.

நோத் நில அளவைப் பகுதி பொது வேலைப் பகுதி, வைத்தியப் பகுதி, தபாற் பகுதி, கல்விப் பகுதி போன்ற அரசாங்க சேவைகளைத் தனித்தனி இலாக்காக்களாக அமைக்க ஏற்பாடுகள் செய்தார்.

### இலங்கையின் கரையோரப் பிரதேச இரட்டை ஆட்சிக் காலத்தில் நீதி பரிபாலனம்

பாதகவியல் வழக்குகள் விடயமாகவும், குடியியற்பாலன வழக்குகள் விடயமாகவும் 1796 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் நீதி பரிபாலன கருமங்கள் நிறுத்தப்பட்ட நிலைக்கு வந்து விட்டன என்பதை நோத் நன்குணர்ந்தார்.

ஒல்லாந்தர் சரணடைந்த பொழுது அவர்களது நீதி நிலையங்கள் தீர்க்கப்படாத வழக்குகளைத் தீர்ப்பதற்குத் தொடர்ந்து மேலும் ஓராண்டு இயங்க வேண்டுமென்ற விதி அமைதி ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிட்ட அவ்வாண்டு கழிந்தும் ஒரு விதமான ஒழுங்கும் ஏற்படவில்லை. அக்கால முடிவில் ஒல்லாந்த நீதிபதிகளுள் பலர், ஆங்கில மன்னருக்குச் சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்து உத்தியோகங்களையும் துறந்தனர்.

இடைக்காலத்தில் வர்த்தக சங்கத்தினர் அமைத்த இராணுவ நீதிமன்றங்கள் குடியியற்பாலன சேவைக்குப் பொருத்தமற்றவை என்பதையும் நோத் கண்டார். ஒல்லாந்தரின் ரோமன் டச்சுச் சட்டத்தை விளங்காத நோத், கல்கத்தாவில் இருந்து எட்மன்ட் கரிங்டன் என்ற பிரபல்ய நியாயவாதியை வரவழைத்து, அவரை இலங்கையின் முதல் பிரதம நீதியரசராக நியமித்து, ஒல்லாந்தரின் நீதிபரிபாலனச் சட்டங்களை ஆராய்ந்து இலங்கைக்கு ஒரு நீதிக் கோவையைத் தொகுக்குமாறு பணித்தார்.கரிங்டன் தயாரித்த தொகுப்பு ஆள்பதியினால் ஏற்கப்பட்டு 1799 இல் அமுலுக்கு வரலாயிற்று.

சுப்பிறீம் கோட் என்ற உயர் நீதிமன்றம் 1801 இல் அமைக்கப் பெற்றது. ஒல்லாந்தரின் பழைய லான்ட்றாட் நீதிமன்றங்களுக்குப் பதிலாக மாகாண நீதிமன்றுகள் ஐந்து மாகாணங்களில் நிறுவப்பட்டன. இவற்றில் குடியியற்பாலன அதிகாரிகளே நீதிபரிபாலணம் செய்தனர். சிறுபாதகவியல் குற்றங்களை விசாரணை செய்வதற்கென பொலிஸ் கோடுகள் நிறுவப்பட்டன.

### இலங்கையின் கரையோரப் பிரதேசநிலச் சீர்திருத்தங்கள்

இவ்விதமாக நோத்தின் பரிபாலனத்தின் ஆரம்ப ஆண்டுகளில் பழைய ஆட்சிமுறையின் ஒழுங்கீனங்களைப் போக்குவதற்கு புனர்நிர்மாண வேலைகளும், முன்னேற்றத்துக்கான பல புதுத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. அவர் அத்துறைகளில் ஈட்டிய வெற்றிகளுக்கு முழுமாறாக இராசகாரிய முறையை ஒழிக்க எடுத்த முயற்சி படுதோல்வியாக முடிந்தது.

பிரித்தானிய வர்த்தக சங்கம் நீக்கத் துணிந்த இராசகாரிய முறை, த மியூறன் விசாரணைச் சபையினர் செய்த தகவுரைகளின் பிரகாரம் 1798 இல் தான் புனருத்தாரணம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், நோத் வர்த்தக சங்கம் செய்த பரிசோதனையினால் ஏற்பட்ட இன்னல்களை வெகு சீக்கிரம் மறந்து பல நூற்றாண்டுகளாக இலங்கையின் பொருளாதார அமைப்பின் அத்திவாரம் போன்று விளங்கிய அம்முறையினை 1799 இல் ஒழிக்கத் திடம் பூண்டார்.

19 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வளர்ந்து வந்த மனிதபிமான கொள்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்ட அவர், இலங்கையில் நிலவிய இராசகாரியம் ஒரு விதப்பட்ட அடிமை முறை எனக் கருதினர். அடிமை முறை உலகத்தின் பல பாகங்களில் வன்மையாகக் கண்டிக்கப்பட்டு வந்த வேளையில், அவர் மனிதர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை நிலத்துடன் விலங்கிட்டு, சாதிப் பாகுபாடுகளை மென்மேலும் வளர்க்கக் காரணமாக அமைந்த இராச காரிய முறையினை அகற்ற முற்பட்டது இயற்கையே.

அம்முறையினை ஒழிக்க வேண்டுமென நோத் தீர்மானித்தற்கு வேறு காரணங்களுமிருந்தன. மானிய முறையின் கீழ் தலைமைக்காரர், முதலியார்கள், விதானைகள் போன்றவர்கள் தமது அதிகாரங்களைப் பிரயோகித்துக் குடிகளை வருத்தி அளவுக்கு மிகுந்த சேவைகளைப் பெறுவதைக் கண்டார், அவர். அவ்வுத்தியோகத்தரின் செல்வாக்கினைக் குறைப்பதற்கு இராசகாரிய முறை ஒழிப்பை ஒரு வழியாகக் கருதினர். மேலும் நிலங்கள் குடியானவருக்குச் சொந்தமாகக் கொடுக்கப்படின் தானிய உற்பத்தி பெருகவும், அரசிறை வருவாய் அதிகரிக்கவும் வழிபிறக்கு மென அவர் கருதினர்.

### இலங்கையின் கரையோரப் பிரதேச இராசகாரிய முறை ஒழிப்பு -1800

1800 மே 3 ஆம் நாள் நோத், இராசகாரிய முறை ஒழிப்புப் பிரகடனமொன்றைப் பிறப்பித்தார். இதன்படி சேவை நிலங்களைப் பயிரிடக் குடியானவர்கள் தமது காணிகளை மாவட்டப் பதிவுக் கந்தோரில் பதிவு செய்து, தமது பழைய இராச காரிய சேவைகளுக்குப் பதிலாகத் தமது விளைச்சலுக்கேற்ப 1/10 முதல் 1/4 வரை திறையாகக் கொடுக்க உரிமை வழங்கப்பட்டது.

இவ்விதமாகப் பழைய இராச காரிய முறையினை நிராகரித்த மக்கள் எல்லாச்சேவைக் கடமைகளினின்றும் விடுதலை பெறுவர். ஆள்பதியின் கட்டளையின் பேரில் அரசாங்கத்துக்குச் சேவை செய்தோர்க்கு பணம் வேதனமாக வழங்கப்படுமெனவும் கூறப்பட்டது.

இவ்வுரிமையை ஒரு சில குடியானவரே விரும்பிப் பயன்படுத்தியதைக்கண்டு மனம் புழுங்கிய நோத், இராசகாரிய முறையைக் கட்டாயமாக நாட்டினின்று முற்றாக ஒழிக்க, 1801 செப்டெம்பரில் புதுப் பிரகடனத்தை வெளியிட்டார். இதன்படி பழைய இராசகாரிய முறை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக அரசாங்கத்துக்குத் திறை செலுத்துதல் கட்டாய மாக்கப்பட்டது.

அரசாங்கத்துக்குச் சேவை செய்த முதலியார்கள், விதானைகள் போன்ற அதிகாரிகளின் சேவைக்கு நிலம் (நிந்தகம்) கொடுக்கப்படும் பழைய பழக்கத்திற்குப் பதிலாக வேதனம் கொடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டது. இச் சீர்திருத்தங்களினால் நோத் எதிர்பார்த்த ஒரு நன்மையும் விளையவில்லை.

இவ்வாறாக இலங்கையில் பிரித்தானிய அரசின் தேசாதிபதியாலும், வர்த்தக நிறுவனத்தாலும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஆட்சிக்காலமே 'இரட்டை ஆட்சி' எனப்படுகின்றது. இந்த இரட்டை ஆட்சிக்காலம ஒக்டோபர் 12.1798 திகதி முதல் யூன் 1.1802 ஆம் திகதி வரை நீடித்தது. இக்காலத்தில் இரு சாராருக்குமிடையில் அடிக்கடி முரண்பாடுகள் எழுந்தன.

### இலங்கையின் கரையோர பிரதேசத்தில் முடிக்குரிய குடியேற்ற நாட்டு ஆட்சிமுறை

நோத் இலங்கையின் ஆள்பதியாகப் பதவியேற்று, மூன்று ஆண்டுகள் கழியமுன்னர், நாட்டின் அரசாங்கத்தில் இன்னுமொரு மகத்தான மாற்றம் ஏற்பட்டது.1801 ஆம் ஆண்டின் இறுதியில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே ஏற்பட்ட அமைதிஒப்பந்தத்தின்படி இலங்கை ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிற்று.

1802 ஆம் ஆண்டில் கரையோர மாநிலங்களில் வர்த்தக சங்கத்தின் ஆட்சியுரிமை நிராகரிக்கப்பட்டு, முடிக்குரிய குடியேற்ற நாட்டு ஆட்சிமுறை தொடங்கிற்று. முடிக்குரிய குடியேற்ற நாடென்பது, பிரித்தானிய அரசாங்கத்திற்குச் சொந்தமானதும், குடியேற்ற நாட்டுச் செயலாளர், ஆள்பதியின் மூலம் பரிபாலனம் செய்த நாடெனப் பொருள்படும். புது ஏற்பாட்டின்படி ஆள்பதி குடியேற்ற நாட்டுக் காரியாலயத்துக்கும், குடியேற்ற நாட்டு அமைச்சர் மூலம் பிரித்தானிய பாராளுமன்றத்துக்கும் பொறுப்பேற்றார்.

நாட்டின் சகல அதிகாரங்களும் ஆள்பதியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன. அரசியல் சம்பந்தமான கொள்கைகளை நிர்ணயிக்கும் அதிகாரம் மாத்திரம் குடியேற்ற நாட்டு அமைச்சரின் கைகளில் இருந்தது. முக்கிய விடயங்களில் ஆள்பதிக்கு ஆலோசனை கூறும் பொருட்டு ஓர் ஆய்வுரைக் கழகம் நியமிக்கப்பட்டது.

இக் கழகத்தில் அரசாங்கத் தலைமைச் செயலாளன், இறை வரி, வர்த்தக இலாக்காத் தலைவன், கணக்குப் பரிசோதகர் என்னும் அலுவலாளர்கள் அங்கம் வகித்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 பில்லியன்...

ஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“எதிர்காலத்தின் தேவைக்கு ஏற்ப வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும். தற்போது மத்திய வங்கிக்கு சொந்தமான வெளிநாட்டு கையிருப்பு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் வெளிநாட்டு கையிருப்பு பூஜ்ஜியமாக காணப்பட்டது. தற்போது வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்துள்ள நிலையில் நாம் இறக்குமதி தடைகளை கட்டம் கட்டமாக நீக்கினோம்.

அதேபோல் தற்போது வாகன இறக்குமதிக்கு மாத்திரமே தடை விதிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் உரிய முறைமையின் கீழ் நாம் தேவைக்கு ஏற்ப வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கியுள்ளோம்.

சுற்றுலாத்துறைக்கு தேவையான 750 வான்களும் 250 பஸ்களும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளோம். அரசாங்கம் நிதியமைச்சு ஆகியன ஆராய்ந்தே இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது” என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## மருமகனின்...

மீது மருமகன் தாக்குதல் நடத்தியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட மருமகனை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ம-7,10)

## அரங்கத்தை...

தான் அழகாக இருப்பதற்கான இரகசியத்தைக் கூறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைவரையும் சிரிப்பலையில் ஆழ்த்திய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

நுவரெலியா மீபிலிமான பகுதியில் விசேட புத்தாண்டு விழா இடம்பெற்றுள்ளது.

இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டிருந்ததுடன் இதன்போதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது புத்தாண்டு விழா மைதானத்தில் போட்டிகளைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனாதிபதியின் அருகில் சென்ற அறிவிப்பாளர் எப்படி இவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்? என வினவியுள்ளார்.

இதற்கு ஜனாதிபதி சிரித்துக் கொண்டே ஐ.தே.க.வில் இணைந்து நான் அழகாகிவிட்டேன் என்ற சுவாரஸ்யமான பதிலை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியிடம் அறிவிப்பாளர் கேட்ட கேள்வியும் அதற்கு கிடைத்த பதில்களும் ஒலிபெருக்கி மூலம் அரங்கம் முழுவதும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டு அனைவரையும் சிரிக்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## போதை வாங்கு...

கைது செய்யப்பட்டார்.

குருநகர் தண்ணீர்தாங்கியடி பகுதியில் கடந்த வாரம் இரவு நேரம் ரூ.90 ஆயிரம் பணத்தையும் அதே இடத்திற்கு அருகாமையில் ரூ.8 இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான ஐந்தரை பவுண் நகைகளையும் திருடிய பிரதான சந்தேகநபரே சிக்கியுள்ளார்.

கைது செய்யப்பட்ட 23 வயதான திருடன்போதைவஸ்து வாங்க பணம் தேவைப்பட்டதால் திருடியதாக, குற்றச்செயல்களை ஒப்புக் கொண்டார்.

அதன் பின் அவரை யாழ்.மாவட்ட குற்றதடுப்பு பிரிவினரிடம் விசாரணைக்காக புலனாய்வு பிரிவினர் ஒப்படைத்தனர். யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் அவரிடமிருந்து நகை, பணத்தை மீட்டதோடு, அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர். (ம-7,10)

## புலிகளின்...

ஊடகங்களில் கருத்துக்கள் வெளிவருகின்றன.

என்னை பொறுத்தமட்டில் அவர்கள் கூறுவதன் பிரதான காரணம் தொடர்ச்சியாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் வாக்களித்தாலும் தமிழர்களின் உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாகவே தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை தேர்தலில் நிறுத்த வேண்டும் என்ற கருத்துக்கள் நிலவுகின்றன.எனது தனிப்பட்ட கருத்தின்படி தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்பது மிகவும் கடினமான விடயம்.

வடக்குக் கிழக்கு மலையகம், கொழும்பைப் பொறுத்த வரையில் அங்குள்ள தமிழர்கள் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பின்னர் ஒரு தமிழ் தலைமையை இன்னும் அடையாளம் காணவில்லை. காணவும் முடியாது. எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கட்சித் தலைவர் அல்லது பொதுவானவர்களையோ அடையாளம் காண்பது என்பது கடினமான விடயம்.

குறிப்பாக தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்திற்கு மக்கள் மத்தியில் போதிய வரவேற்பு இருப்பதாக நான் காணவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## வங்குரோத்து...

வொன்றில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தாண்டுக் காலத்தில், நாட்டில் பாதி பேர் ஏழ்மை நிலையை அடைந்துள்ளனர்.

புத்தாண்டு ஆகாரங்களைக் கூட சரியாக தயார் செய்ய முடியாமல் பலர் உள்ளனர். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து தொழிற்சாலைகள் மூடப்படுவதால் நாட்டின் பெரும்பாலான மக்கள் கடுமையான அழுத்தத்தில் நாளாந்த வாழ்க்கையை கடத்தி வருகின்றனர்.

இந்நாட்டில் 50% பேர் நிர்க்கதியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும்போது எல்லாம் சரியாகிவிட்டது என்று கூறுபவர்கள் இருந்தாலும், அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட இந்த இயல்பு நிலை மக்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சகல பாடசாலை மாணவர்களையும் விடுத்து ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் மதிய உணவு வழங்கப்படுவது, வேலைவாய்ப்பு இன்மையை நாளுக்கு நாள் அதிகரிப்பது, வறுமையை ஒழிப்பதற்கான வேலைத் திட்டம் இன்மை, முதலீடு எதுவும் இன்மை என சகல வழிகளிலும் நாடு வீழ்ச்சியடைந்துள்ளதாலேயே வறுமை அதிகரித்து வருவதாகவும், நாட்டில் தற்போது மனிதாபிமானமற்ற அரசாங்கமே ஆட்சியில் உள்ளதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி மக்கள் சார், மனிதாபிமான உடன்படிக்கையுடன் இந்நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் அபிவிருத்தி யுகத்தை ஆரம்பிப்பதன் மூலம் அடுத்த வருட புத்தாண்டைக் கொண்டாட நடவடிக்கை எடுப்போம்.

ஏலவே இது தொடர்பான திருத்தங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடியுள்ளோம். பொருளாதாரத்தைச் சுருக்கும் தீர்வுகளுக்கு பதிலாக அனைவருக்கும் நலனையும் சௌபாக்கியத்தையும் கொண்டு வரும் பொருளாதார விரிவாக்கமே நமக்கு இங்கு தேவைப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

2019ஆம் ஆண்டைப்போல மீண்டும் மக்கள் ஏமாந்து விடக்கூடாது. 5 வருடங்களுக்கு முன்னர் மக்களை ஏமாற்றி இன்று நாடே வங்குரோத்து நிலைக்கு ஆளாகிவிட்டது.

தற்போதுள்ள வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதா? அல்லது தற்போதுள்ள வங்குரோத்து நிலையிலிருந்து மேலும் வங்குரோத்து ஆவதா? என்பதை இம்முறையும் மக்களே தீர்மானிக்க வேண்டியுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

குறுகிய மனப்பான்மையைக் காட்டிலும் சர்வதேச தொழிலாளர் சந்தையின் தேவைக்கேற்ப எமது பாடத்திட்டம் சீர்திருத்தப்பட்டு, மூடிய நிலையில் இருந்து பரந்த அணுகலை சாத்தியப்படுத்தும் நாடாக இலங்கை மாற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம-7,10)

## கொரோனாவால்...

பிரான்ஸ் நாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பெண்ணொருவர் கொரோனோத் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டில் இருந்து ஆயுர்வேத சிகிச்சைக்காக வந்த 62 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் வட்டுக்கோட்டை அராலியில் தங்கியிருந்த நிலையில் காய்ச்சல் காரணமாக் இரு நாட்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்.

எனினும், சிகிச்சை பலனின்றி இரு தினங்களுக்கு முதல் உயிரிழந்துள்ளதுடன், உயிரிழப்பின் பின் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலத்திற்கு பின்னர் கொரோனோ தொற்று காரணமாக ஒரு மரணம் பதிவாகியுள்ளது.

மேலும், கடந்த 12ஆம் திகதி குரு[illegible] போதனா வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நபரொருவர் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில், விழிப்புணர்வுடன் இருக்குமாறு பொதுமக்களுக்கு வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் குறித்த பெண்ணின் சடலத்தை தகனம் செய்யுமாறு சுகாதார தரப்பால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7,10,33)

## கொத்து ரொட்டி...

களுக்கு சுற்றுலாப் பயணிகள் முகம் கொடுத்து வருகின்றனர்.

குறுந்தூர பயணங்களுக்கு வாகன சாரதிகள் அதிக பணம் அறவிடுதல், உடமைகளைக் கொள்ளையடித்தல், சேவைக் கட்டணங்கள் மற்றும் விலைகளை அதிகரித்தல் போன்ற முகம் சுழிக்க வைக்கும் செயற்பாடுகளை சுற்றுலாப் பயணிகள் எதிர்கொள்கின்றனர்.

அண்மையில், சைவ உணவகம் ஒன்றுக்குச் சென்ற பெல்ஜியப் பிரஜைக்கு ஒரு வடை 800 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இது தொடர்பில் குறித்த பயணி காணொளி மூலமாக தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், மீண்டும் ஒரு இதுபோன்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஒரு பயணி உணவு உண்பதற்காக வீதியோரக் கடை ஒன்றில் விலை விசாரித்தபோது அங்கு சொல்லப்பட்ட விலையைக் கேட்டு அதே இடத்தில் வெளிப்படையாகவே தனது அதிர்ச்சியை வெளியிட்டுள்ளார்.

ஒரு கொத்து ரொட்டியின் விலை 1900 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைக் கேட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணி விலையைக் கேட்டு அதிர்ச்சியடைந்த நிலையில், குறித்த கடையின் உரிமையாளர் விரும்பினால் வாங்குங்கள் இல்லை என்றால் சென்று விடுங்கள் என்று கடுந்தொனியில் தெரிவித்துள்ளார்.

இவற்றை காணொளியாக பதிவு செய்துள்ள அந்த பயணி தன்னுடைய ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக, பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவித்த இலங்கை மீளெழுவதற்கான பிரதான இலக்கு அன்னிய செலாவணியை ஈட்டுவதாகும்.

சுற்றுலாப் பயணிகள் மூலமாக அதிகமான வெளிநாட்டு வருமானம் கிடைக்கின்ற நிலையில், இவ்வாறான முகம் சுழிக்க வைக்கும், சுற்றுலாப் பயணிகளை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் விடயங்கள் எமது நாட்டின் வருமானத்தையும் பாதிக்கின்றது.

அத்துடன், இப்போதைய டிஜிட்டல் மயமான காலத்தில் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்களது சமூக வலைத்தளங்களில் தங்களது சுற்றுலா அனுபவங்களை நேரலையாக பகிர்ந்து கொள்ளும்போது இதுபோன்ற மோசடி நடவடிக்கைகள் நம் நாட்டின் மீதான நன்மதிப்பையும் பாதிக்கின்றன.

சுற்றுலாவுக்காக நமது நாட்டை நோக்கி வருகின்றவர்கள், எமது கலாசாரத்தையும், உணவு பழக்க வழக்கங்களையும், எமது பண்பாடையும் கற்றுக் கொள்ளவும், அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும் வருகின்றார்களே தவிர இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைகளுக்கு முகம்கொடுக்க அல்ல என சமூக வலைத் தளங்களில் பலர் தமது விமர்சனங்களை வெளியிட்டுள்ளனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி அமைச்சுப் பதவியை துறந்து

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விஜயதாச ராஜபக்ஷ திட்டம்!

நீதி அமைச்சர் பதவியிலிருந்து விலகி அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவருடன் மேலும் 5 முக்கிய அமைச்சர்களும் அரசாங்கத்திலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கடந்த வார இறுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டதுடன், அவரிடம் நீங்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா? என ஊடகவியலாளர்கள் கேட்ட போது, 'மக்கள் கேட்டுக் கொண்டால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார்' என அவர் பதிலளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பல கட்சிகளின் கூட்டணியில் கீழ் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விஜயதாச ராஜபக்ஷபோட்டியிடக்கூடும்என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7.10)

# ஈரானிய ஜனாதிபதி இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஈரானிய ஜனாதிபதி எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கான விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளதாக செய்திகள் வெளியாகிய நிலையில் இலங்கை வெளிவிவகார அமைச்சு அதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்போது உமா ஓயா பல்நோக்கு திட்டம் மற்றும் 25 கிலோ மீட்டர் நீர் கடத்தும் சுரங்கப்பாதையும் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி முன்னிலையில் திறந்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7.10)

## அரசியல் சதிகளைக் கடந்து

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை முன்னோக்கி கொண்டு செல்வோம்

### பதில் செயலாளர் நாயகம் உறுதி

(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேனவுக்கு விதிக்கப்பட்ட நீதிமன்ற தடையுத்தரவானது அரசியல் சதித் திட்டமாகும் என கட்சியின் பதில் செயலாளர் துஷ்மந்த மித்ரபால தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு பாரிய சவால் மிகுந்த ஒரு வாரமாகும். இந்த ஆண்டு தேர்தல் ஆண்டாகும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்க வேண்டியுள்ளது.

நாம் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு சில தீர்மானங்களையும் எடுக்க நேரிடும். வேறு சக்திகள் எமது கட்சி மீது அதிகாரம் செய்வதற்கு இடமளிக்கமாட்டோம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்ற ரீதியில் நாம் எதிர்நோக்கியுள்ள சவால்களில் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நிவர்த்தி செய்து நாம் முன்னோக்கி செல்வோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி புதிய கட்சிகளை ஆரம்பித்தவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அதிகாரத்திற்குட்படுத்த முடியவில்லை.

கட்சியின் அரசியலமைப்பை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். நாட்டு மக்களின் வரிச்சுமையை குறைப்பதற்கு அரசாங்கம் எந்தவித நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை. எமது கட்சியின் தலைவருக்கு நீதிமன்றத்தினால் தற்காலிக தடையுத்தரவே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தடையுத்தரவு காலத்தில் பலர் தங்களுக்கேற்றவாறு தீர்மானம் மேற்கொள்கின்றனர்.எனவே இது அரசியல் சதி என்றே தெரிகின்றது என தெரிவித்துள்ளார். (ம-7.10)


## வேலையாள் உடன் தேவை

சிங்கப்பூருக்கு சமையல் உதவியாளர் 5 பேர் உடன் தேவை. மாதச் சம்பளம் சிங்கப்பூர் டொலர் 1400
(இலங்கை ரூபாவிற்கு 300,000/=)
தங்குமிடம், சாப்பாடு வசதி உண்டு.
வயது : 25 - 50 வரை
நேர்முகப்பரீட்சை வியாழக்கிழமை.
(462)
077 933 7759

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு:
(395)
074 17 37 684

## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.
021 222 5686
076 424 7111
(293)
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

## உங்கள் ஆலய திருவிழாக்களில்...

(18.04.2024 வரை)
ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு தொடர்பு கொள்ளலாம்.
கலைமாமணி DR.S.S. சர்மா(குருஜி)
(435)
075 99 811 77

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0147)
076 825 7716 (ஆகாஸ்)

## கிளிநொச்சி விசேட தேவைகளுக்குட்பட்டோர் வலையமைப்பு - இலங்கை

### பணி வெற்றிடம்

**கணக்கு உதவியாளர் :**

ஒரு வெற்றிடம் (இருபாலாரும்) கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

1.கல்வித்தகைமை : க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி க.பொ.த உயர் தரத்தில் வர்த்தகப் பிரிவில் மூன்று பாட சித்தி
2. வயதெல்லை : (24 - 45)
3. மேலதிக தகைமைகள் : கணினி அறிவு
4. துறைசார் கல்வியறிவு : (அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்), முன்னனுபவம் விரும்பத்தக்கது.

**குறிப்பு:**

- தங்களது சுயவிபரங்களை 30.04.2024ம் திகதிக்கு முன் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.
- கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவி நிலையினை குறிப்பிடவும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது கிழமை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்கலாம்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :**
பணிப்பாளர்,
கிளிநொச்சி விசேட தேவைகளுக்குட்பட்டோர் வலையமைப்பு - இலங்கை,
மலையாளபுரம் தெற்கு, மலையாளபுரம்,
கிளிநொச்சி.

மேலதிக விபரங்களுக்கு :
பணிப்பாளர்
தொ.இல :
077 831 7536
(457)

## வீடு வாடகைக்கு

ஆடியபாதம் வீதியில் நிறுவனத்திற்குரிய வீடு வாடகைக்கு உண்டு.
காணிகள், வீடுகள் விற்கவும் வாங்கவும் முடியும்.
(C-0146)
077 933 7759

## மணமகள் தேவை

76, கனடா சிற்றிசன், டிவோர்ஸ் பட்டதாரி மணமகனுக்கு 86 களில் பிறந்த டிவோர்ஸ்/விதவை மணமகள் தேவை.
துர்க்கா திருமண சேவை
(463)
077 818 5978

## வேலையாட்கள் தேவை

பிறவுண் வீதியில் இருக்கும் தையல் நிலையத்திற்கு தைக்க தெரிந்த பெண்கள் தேவை.
(458)
077 791 4221
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

## தேவை

சுன்னாகத்தில் அமைந்திருக்கும் Hardware கடைக்கு அனுபவம் உள்ள வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு:
(460)
075 617 8008

## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0148)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
(C-0148)
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.101, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org